ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமகாபாரதவிலாசம்

பஞ்சபாண்டவாள் வனவாசமென்றுவழங்குகின்ற

நச்சுப்பொய்கை.

இயலிசைநாடகமென்னு முத்தமிழ்வல்லவராகிய

ம-ள-ள-ஸ்ரீ, இராயநல்லூர்

இராமச்சந்திரக்கவிராயர்

இயற்றியதை.

இஃது

கோகுலாபுரம்.

அருணாசலமுதலியாரால்

பரிசோதித்து.

கரும்பாக்கம்.

கைலாயமுதலியார்

திருப்பதி.

இரத்தினமுதலியார்

இவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௲௮௱௯௰௯—அக்டோபர்மீ

—0—

உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமகாபாரதவிலாசம்.

நச்சுப்பொய்கை

காப்பு—விநாயகர்தோத்திரம்.

விருத்தம்

ஈத்திசைதனிலுங்கீர்த்தி யிலகியகுருகுலத்தில்
உத்தமகுணத்தில்மிக்க வுயர்ந்தபாண்டவர்கள்நீதி
சத்தியவிரதஞான தனஞ்செயன்கதையைப்பாட
வித்தகன் ஆலமேவும் விநாயகர்காப்புத்தானே

முருகர்தோத்திரம்.

விருத்தம்-இ-ம்-தோடி.

சரஹணபவனேபோற்றி சங்கரன்மகனேபோற்றி
அரிதிருமருகாபோற்றி ஆறுமாமுகனேபோற்றி
திருவளர்குகனேபோற்றி செங்கைவேலவனேபோற்றி
கரிமுகற்கிளையவெங்கள் கந்தனேபோற்றிபோற்றி

சிவன்-தோத்திரம்

விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

திங்கள்செஞ்சடையாய்போற்றி திரிபுரமெரித்தாய்போற்றி
மங்கையோர்பாகாபோற்றி மான்மழுதரித்தாய்போற்றி
துங்கவெண்விடையாய்போற்றி துலங்குமுக்கண்ணாபோற்றி
எங்கணாயகனேபோற்றி யீசனேபோற்றிபோற்றி

மகாவிஷ்ணுதோத்திரம்.

விருத்தம் - இ-ம் - பைரவி

ஆரணப்பொருளேபோற்றி அகிலநாயகனேபோற்றி
பாரளந்தவனேபோற்றி பாண்டவர்தூதாபோற்றி
வாரணமழைத்தபோது வந்துகாத்தவனேபோற்றி
காரணவஸ்துவான கண்ணனேபோற்றிபோற்றி

உமையவள்-இலட்சுமி-சரஸ்வதி-தோத்திரம்,

விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி

திருவளருலகம்போற்றுஞ் சிவகாமித்தாயேபோற்றி
மருவளாகமலமேவு மாதுலட்சுமியேபோற்றி
பெருமையாயுலகுள்ளோர்கள் பெற்றுயர்மதுரைவாக்கு
தருஞ்சரஸ்வதியேயுந்தன் றுளிணைபோற்றிபோற்றி

தோடயம்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி

அடதாளசாப்பு

விநாயகர் - தோத்திரம்

சரணஞ்சரணஞ்-சரணஞ்சரணஞ்-சற்குருநாதா-சரணஞ் சரணம்
நீதாசரணம்வி நோதாசரணம்
ஆதாரமாங்கண-நாதாசரணம்
தீதேதுமில்லாம-லிந்தத்தமிழுக்குத்
திருவருள்செய்து-தினங்காக்கவேணுஞ்
சிவசங்கரி-யுலகங்களை-புகவுந்தனி-விமைதந்தருள் (நீதா)

சுப்பிரமணியர்-தோத்திரம்

துய்யாசரணமென்-னையாசரணம்
பெய்யானவேல்முருகையாசரணம்
ஓய்யாரமாமயி லேறிவந்தேயேழை
யுனாக்குந்தமிழுக்-குதவிசெய்யவேணும்
ஒருசெங்கனி-யதுகொண்டிட-வுலகந்தனை-வலம்வந்திடும்(துய்)

சிவன்தோத்திரம்

ஏகாசரணம்-விவேகாசரணம்
வாகானதோகையர்-பகாசரணம்
பாகானவிந்தத்-தமிழுக்குதவிசெய்து
பாலிக்கவேணுநகிருபை-பாலிக்கவேணும்
மணியுந்திகழ்-மதியும்புன-லறுகும்புனை-சடைதங்கிய (ஏகா)

உமையவள் தோத்திரம்

மாலிசரணங்-கபாலிசரணம்
சிவிவிசாலாத்திரி-சூலிசரணம்
ஞாலந்தனிலிந்த-நாடகம்பாட வெண்
நாவிலிருந்துநீ நன்மைதரவேணும்
நவகண்டமும்-மதிருமபடி-நடனமபுரி-பதபங்கய (மாலி)

விஷ்ணு தோத்திரம்

நந்தாசரணமு-குந்தாசரணகோ
விந்தாசரணு-விர்தாசரணம்
எந்தாயித்றகொரு-விக்கினமுமில்லாமல்
இனையருள்தந்துநீ-முன்னிற்கவேணும்
இடமங்கைய-ருடனிங்கித-முடனமங்கள மலர்கின்றிடும்(நந்தா)

சாஸ்வதி-தோத்திரம்

வாணிசரணஞ்சொல் வேணிசரணங்கல்
யாணிமலர்மாலை-பூணிசரணம்
வாணுதலாலே சரஸ்வதியேயிந்த
வண்டமிழ்சொல்லல்நல் வாக்கருள்வேணும்
மலர்தங்கிய-பிரமன்றிரு-வுளமுங்கிர்த-முடனேமகிழ்வாணி
சரணஞ்சொல்வேணி-சரணகல்யாணி-மலர்மலைபூணி (சரணம்)

மங்களம்

தரு-இ-ம்-அசாவேரி-தாளம்-திரிபுடை

பல்லவி

ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜெயமங்களம் நல்ல
திவ்யமுகச்சந்திரனுக்கு-சுபமங்களம

அநுபல்லவி

பராபிரம்மனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
சாருங்காமனுக்கும் ரவிகுலசோமனுக்கும்
ஸ்ரீராமச்சந்திரனுக்கு

சரணங்கள்

கொண்டல்மணிவண்ணனுக்கும் கண்ணனுக்குமங்களம்
கோசலைகுமாரனுக்கும் வீரனுக்குமங்களம்
புண்டரீகத்தாளனுக்கும் பூசக்கிரவாளனுக்கும்
தண்டுளபதோளனுக்குந் ஜானகிமணாளனுக்கும்
ஸ்ரீராமச்சந்திரனுக்கு

கோவைமணிவாயனுக்கும் மாயனுக்குமங்களம்
கோதண்டகையனுக்கு மெய்யனுக்குமங்களம்
காவுகுணசீலனுக்கும் சத்தியவிசாலனுக்கும்
தேவானுகூலனுக்கும் தெசரதன்பாலனுக்கும்
ஸ்ரீராமச்சந்திரனுக்கு

பிரண்டகர்த்தனுக்கும் வேதனுக்குமங்களம்
பாதனுமன்பனுக்கு நூன்பனுக்குமங்களம்
சகலவல்லாசனுக்கும் திருமங்கதகாசனுக்கும்
அகிலவிசாலனுக்கும் அயோத்திவாசனுக்கும்

ஸ்ரீராமச்சந்திரனுக்கு

விநாயகர்-வருகிற-தரு-இ-ம்-தோடி.

தந்திவிநாயகர்-ஜெப-தொந்திவிநாயகர்வந்தார்

அந்தமுள்ளமன்னர்துதிசெய்திடும் ஆலநகர்தனில்சாலவிளக்கிடுக்
கங்கசகோதரதொந்திர்பாகா கற்பகவிற்பன அற்புதமாக (தந்தி
மெருவையுடையவனைத்தோன் இந்ததேதிசெயக்குமிறைந்தோனை
சீரும்ஆகுவின்மேலேறிவருகினைதசித்தனபரிசுத்தமூர்த்தி அலங்கிர்த
வல்லணிபமணவாளன் எழில்-மதகிரிபருந்தோளன்
செல்லும்வேதன்முதலோர்துதித்திடுஞ்சோதினில்பிரகாதி ஆதி (தந்)

மும்மதம்பொழிமாதன்-மும்மூர்த்திக்குமுயர்வேதன்
செம்மையாகவிக்கினங்களைய தேசலங்குசபாசமேந்திப (தந்தி)

பொருவிருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

மட்டில்லாகீர்த்திபெற்றமதிகுலக்கொழுந்தேயிந்த
அட்டதிக்கெல்லாங்காக்கும் அடலுறுமாசர்கோமான்
இட்டமையடக்கும்வீரன் துதிமிகுதர்ம்மர்வாசல்
கட்டியக்காரன்வந்துகளிப்புடன்தோணினனே

கட்டியக்காரன்-வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி.

தகர்தத்தித்தோத தகர்தித்தித்தோத
தகர்தித்திதகர்தித்திதகர்தித்தித்தோத
விந்திவிந்திக்கொண்டுவேடிக்கையாகவே
சுந்திர ஆஸ்தானசந்தோஷிவந்தான் (தகர்த்த)
மன்னவன்தர்ம்மகராஜன்வாசலே
உன்னதமாய்காக்கும் சந்தோஷிவந்தான் தகர்தத்

கோணைப்புளியங்காயை கொத்தோடேவெட்டின
குணங்கெட்ட ஆஸ்தான சந்தோஷிவந்தான் தகர்த்த
பாவக்காகசப்பென்று பாரிலறிந்துசொல்லும்
பண்புள்ள ஆஸ்தானசந்தோஷிவந்தான் தகர்த்த

கோவைக்கள்ளியின்மேலே கொழுத்துக்காய்த்ததென்று
குறிசொல்லும்ஆஸ்தான சந்தோஷிவந்தான் தகர்தத்
செல்லரிசியொன்று னேர்மையறிந்துசொல்லும்
வல்லபஆஸ்தான சந்தோஷிவந்தான் தகர்த்த

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

திட்டமாய்தருமர்வாசல் திறமையாய்க்காத்திருக்கும்
கட்டியக்காரனயானும்களிப்புடன்வந்தேனிப்போ
கொட்டியபவயணமேது குறிப்புடன்பாடலேது
அட்டிபண்ணுமல்நீங்கள் ளறியவேயுரைசெய்வீரே

நச்சுப்பொய்கை

வசனம்

ஆர்காணும் இந்தசபையிலே மத்தளத்தை உடைக்கிறபேரும்சுத்தியைக் கிழிக்கிறபேரும் தாளத்தை உடைக்கிறபேருமதீங்களார்காணும்நான்சொல்லுகிறதீமாட்டுக்குச்சரியாக தாள மத்தளங்கள்போடுங்கள் பாப்போம்.

கட்டியக்காரன்சொல்-தரு-இ-ம-கண்டா-ஆதிதாளம்

தத்தானத்தந்தானே-தானே-சந்தமாமா-வோய்-மாமாமாமா

தானத்தந்தானேதானே-சந்தமாமா-ஓய்-அந்தமாமா-இந்தமாமாசந்தமாமாநான்-செங்கமாவிலேயிருந்துவந்தேன்-சந்தமாமா-ஊப்பேறுட்டம்முடிம்முசந்தமாமா-காலெலஞ்சுபேரு முத்துலகும்மா-சந்தமாமாநாலெலஞ்சுவாருதல்லிபேரு-சந்தமாமா-வேலூருவெறிகுக்கா-சந்தமாமா-ஆக்கிறவளபெண்ணல்லாவோ-சந்தமாமா-அடுப்பங்கட்டி- மண்ணல்லவோ-சந்தமாமா-காக்காகறுத்திருக்கும்-சந்தமாமா-கடல்தண்ணிஉப்புகரிக்கும்-சந்தமாமா-இரண்டாட்டுக்கு எட்டுகாலுசந்தமாமா-என்பெண்டாட்டியைகேட்டுப்பாரு சந்தமாமாவேலூரிசண்டையானால் சந்தமாமா-நான்வேலியின்கிழேபதுங்கியிருப்பேன்-சந்தமாமா-சண்டைக்கழித்த மூன்றுநாளில்-சந்தமாமா-நான் சண்டைபோட்டு சம்மளம்வாங்குவேன் - சந்தமாமா-வற்றியிருக்கிற யேரிக்குள்ளே - சந்தமாமா-நான் -விளையவலையகீஞ்சிவருவேன்- சந்தமாமா-நிறைந்துயிருக்கிறஏரிக்குள்ளே- சந்தமாமாநான் - தலைமேலேவோடிகரைமேலேவருவேன்-சந்தமாமா ஓய்-ஆறுகாட்டிலேசண்டையானால்-சந்தமாமா-நான் அடுப்பங்கரையிலே- ஒளித்துயிருப்பேன்-சந்தமாமா சண்டைகழித்தமூன்றுநாளில்-சந்தமாமா-நான்-சாவுகிறகிழவியை தலைவெட்டிவருவேன்-சந்தமாமா-அப்படிப்பட்டாணசூரன்-சந்தமாமா-நான்-இப்படி வேஷமாய்வந்தேன்-சந்தமாமா-ஆத்துக்குள்ளேஜெலத்தல்லவோ -சந்தமாமாபையன்-குத்துக்குள்ளே பீயல்லவோ-சந்தமாமா-அந்தமாமா இந்தமாமாசந்தமாமா-நான்-கோலகொண்டாவிலிருந்துவந்தேன்-சந்தமாமா.

பொது-விருத்தம்

சாதமென்றுரைத்தவாழ்வை தர்மருந்தம்பிமாரும்
பாமனைத்தியானஞ்செய்து பலபலவனங்கள்தாண்டி

காதலக்கமலம்போலும் கல்வியும்செல்விகள்தேர்ந்த
வீரனும்விண்டுசிந்து மேவியவிபுனனைசார்ந்தார்

வசனம்

அகோதெப்படியென்றால் பஞ்சபாண்டவர்களைந்துபேரும் துரோபதையும தாஙகள் காடுவிட்டு பலவிதமாகிய வனங்களிலே வாசம்பண்ணி அவடங்களிலுண்டாகிய புண்ணியதீர்த்தங்களாடி விண்டுசந்து முனீஸ்வரன் வனத்துக்குவருகிற விதங்காண்க.

பாண்டவர்கள்-வருகிற-தரு,

ராசராசன்மதிமரபினில் வரும்
அதிபதிதர்ம்மராசன்வந்தானே
மாசில்லாநல்லமநுநெறிமுறைஅதிகுண சேகரன்
தேசுலாவியனயகுணமிலகு சுதாகரன்
வீசுபுகழ்பாண்டு புத்திரன்
வயித்திரனெவர்களும்பேசரியமலர் பத்திரன்
சுபசித்திரன்பரிமளவாசமிகு தாரன்
வருவில்மாரன் அதனகுரன் பிரபல்லியதீரன்
வரும்பிரசண்டதெண்டிறலமனுநெறி தரும்
அகண்டமண்டலபதிக ராசராசன்
மதிமரபினில்வரும் அதிமதிதர்ம்ம
ராசன்வந்தானே

கட்டளைக்கலிப்பா,

அன்னமேபசுஞ்சொர்ன்னமேயெவ்வர்ன்னமே
அடவிதனனிறுசோலைகளமேவியே
பொன்னுமாமறையோர்கள்புகழ்ந்திடும்
புகழையும்யிப்போகண்டு
வருகுவோம்சொல்லிடமதன்றன்னைப்
பழித்திடும்சொர்ன்னஅனைல்
இனவேடிக்கைகண்டுமேஅன்னமேநாமிருவருக்கூடியே
அன்புடன்போயரித்துவருகுவோம்.

வசனம்,

கேளுங்கள் என்தம்பிமார்களே கேளாய்பெண்ணேதுரோபதா யிந்த வனம் எந்தவனமோ தெரியாது ஆகையால் நாமெல்லோரும்போய் இந்த

வனத்தின்வேடிக்கைகளைக்கண்ணினாலேகண்டுவருவோம்வாருந்தம்பிமார்களே பெண்ணேதுரோபதா,

சிங்காரத்தருவு,

சந்தனமரத்துநிழல்விரிந்தயாய்நிறைந்திடும்நற் சாலையும்
தென்னஞ் சோலையும் பெண்
அந்தமாமுனிவர்களுஞ்சந்ததந்நிறைந்துசூழுங் கூடமும்
சித்திர மாடமும் பெண்
பூவைகுயில்தோகைமிகுவாலகயுடன்னடிக்கும் வாசமும்
கன நேசமும் பெண்
பத்தியாய்நினைத்ததெல்லாஞ்சித்தியாயருளுமன்னர் வீதியும்
பல சாதியும் பெண்
எங்குப்புகழ்விண்டுசிந்துசாரைதிந்திடும்நகர்க் கோயிலும்
அறி வாயலும் பெண்
கண்டிடக்கூடாதுமாதர்காட்சிகள்பெற்றிடும்வெகுசோலையும்
திகழ் சாலையும் பெண்
சங்கீதவீணைமுழக்கும்தும்புருநாரதர்பாடுஞ் சோலையும்
யாக சாலையும் பெண்
அரனரிபிரமாதிதேவரன்பாய்வரங்கொடுக்கும் தீர்த்தமும்
கன க்ஷேத்திரமும் பெண்

தர்மர்சொல்-விருத்தம்.

என்னிடதம்பிமாரே இலகுதுரோபதையேகேளாய்
அன்னிலகாட்டைவிட்டு அடவியில்வந்துசேர்ந்தோம்
மன்னுமிவ்விடந்தான்மெத்த வளம்பெறவிருப்பதாலே
சின்னமில்லாமலிங்கேசிலகாலஞ்சஞ்சரிப்போம்

வசனம்.

கேளுங்கள் என்னருமைத் தம்பிமார்களே கேளாய் துரோபதாராம் சூதாடி நாடுநகரைத்தோற்று இந்த ஆரண்ணியத்திலே வந்து சேர்ந்தோம் ஆனவிந்த க்ஷேத்திரம் தருமதீர்த்தங்கள் திவ்வியவனங்களைப் பொருந்தியிருக்கிறபடியினாலே இங்கே சிலகாலம் வாசஞ்செய்வோம்தம்பிமார்களே பெண்ணேதுரோபதா.

வீமன்சொல்-விருத்தம்.

என்னிடஅண்ணாகேளீ ரிவ்வனத்திருப்போமென்றீர்
அப்படிதானேவுந்தன் அமுர்தவாக்கெதிர்வாக்குண்டோ
செப்பியபடியேநாமும் சிறுள்ளவனத்திலிப்போ
சிந்தையிற்பயமில்லாமல் சிலகாலஞ்சஞ்சரிப்போம்

வீமசேனன்சொல்-வசனம்.

கேளும் என்பிதாவுக்கு சிகரான அண்ணாவே அப்படியேடி உம்மிடம ஞேயிஷ்டப்படிக்கு யிந்த சிங்காரவனத்தில் சிலகாலம் வாசம்பண்ணு வோம் என அண்ணாவே,

சபையார்சொல்-பொதுவிருத்தம்

பாண்டவரிவ்வனத்தில் பாங்குடனிருக்கும்போது
வேண்டியமறைகளோதும் வேதபூசார்கள்தாமும்
பூண்டுமுப்புரிகளாட புத்தகங்கையிற்கொண்டு
தாண்டியேநடைநடைந்து தர்ம்மர்முன்வருகின்றாரே

பிராமணாள்-வருகிற-தரு-இ-ம்,

சிரசினத்துல்லாவும்பூண்டுசிருடன்பஞ்சாங்கங்கொண்டு
அரையினிற்சோமனுடுத்தி அந்தணர்வந்தார்
காதினிற்குண்டலமின்ன கையினிற்கொண்டிகையேந்தி
ஆதிநால்மறையோதிய அந்தணர்வந்தார்
தர்ம்மமேசெயமேயென்று சாஸ்திரிகளேழுபேரும்
பிரம்மகுலத்தில்வரும பிராமணர்வந்தார்
சத்தியம்தவறாததர்ம்மமே சுபமென்று
மெத்தவும்மகிழ்ச்சியாக வேதியர்வந்தார்

தர்மர்-பிராமணருக்குச்சொல்-விருத்தம்.

அரிகரியென்றுசொல்லி ஆரியர்வருகும்போது
பரிவுள்ளதர்ம்மராசர் புன்புடன்மகிழ்ச்சியாகி
பிரியமாய்பீடத்தில் பிராமணர்களையிருத்தி
யிருகரமெடுத்து யிறைஞ்சினாவர்தாமே

வசனம்

சரணஞ்சரணம் சுவாமிவேதியரே தீர்க்காயிசாயிரும்மீன்னாய் தர்ம

னந்தனுமிந்த பீடத்தின்பேரில்உட்காருமையாசுவாமிவேதியரே அப்படி யே நல்லதும்பிள்ளாய் தர்மனந்தனு

தர்ம்மர்சொல்-விருத்தம்

வேதனூல்மறைதெரிந்த வித்தகமறையோரேனீர்
போதவேயிங்குவந்த புதுமைகளேது சொல்வீர்
நீதிசேர்தர்மராயர்னேரிளையோருங்கூடி
பாதமேபணிந்தோமையா பண்புட னுரைசெய்வீரே

வசனம்,

கேளும் சுவாமீ வேதியர்களே தேவரீர் எதுகாரியமாக வந்தீர்கள் எனக்குஅதைநன்றாய்த் தெரியச்சொல்ல வேணுமையாசுவாமி வேதியர்களே,

வேதியர்சொல்-விருத்தம்

இந்தனல்வனங்கள்தன்னி லிருக்குமந்தணர்கள்நாங்கள்
முந்தவேவந்தசேதி முனிவர்தாமுரைத்தாரங்கே
அந்தவோர்சேதிகேட்டு ஆரணந்தன்னில்நாங்கள்
வந்தனம்தர்ம்மாவுந்தன் மனமதுதளரவேண்டாம்

வசனம்,

கேளும் தர்மராசனே நாங்களிந்தவனத்தி லிருக்கப்பட்ட பிராமணாள் உங்களைக்கண்டு யோகக்ஷேமங்களை சொல்லிக்கொண்டு இருக்கலாமென்று வந்தோம் பிள்ளாய்தர்மநந்தனு,

சபையார்சொல்-வசனம்

அகோதெப்படியென்றால் பஞ்சபாண்டவாளைந்துபேரும் விண்டிசிந்து முனியின்பரவனத்திலிருக்கும்போது அதைவிசாரிக்கும்படியாய் துரியோதரன் கொலுவுக்குவருகிறவிதங்காண்க

துரியோதிரன்-வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

ராசராசர்கள்புகழ் துரியோதனன் ராசன்வந்தானே
மகாராசன்வந்தானே

நேசன்சகுனியும்கர்னன் துற்சாதனன் னேரிளையோர்களும்
னேடியசபைதனிலினியதாய்வர தருதத்திததிமித்திகணவென ராச

துன்னுமணிமுடிமின்னவே விரப்பட்டமுந்துலங்கவே
மன்னியவாகுவலையும்புணர்ந்து தளங்குந்தாணியுடன.
இன்னும்பலபல ஆபரணமணிந்து
பிரியத்தொடுவறு-மன்னறைதருவிப்பொரு-வளருகிப்பெற ராசு

விசுசாய்மனாஇருபுறமும்விசவேதியர்கள்வாழ்த்த
மாசிலாக்கிவாணர்புகழவே மாணிலததோர்தழைக்க
தேசுலாவிய செங்கோல்செலுத்திய
திகழ்க்கொடு-அரவக்கொடி-செகமுகத்திலும்-முரசக்கொடி ராசு

வேந்தர்வந்திரு பாகஞ்சூழ்ந்திட விருப்பமுடன்பணிய
சார்ந்தமந்திரிமார்களும் லெகுதந்திரிமார்களுடன்
சேர்ந்துமேவர முரசங்கம் பேரிகை
திமிரக்கடலெனவுத்தெழுமொழிபற்பலவுலகமெச்சிடும் ராசு

துரியோர்தனன்சொல்-விருத்தம்.

மாமனேசகுனிகேளாய் மனமாம்தர்மனாவர்
தாமமாய்பாண்டுமைந்தர் தனித்ததோர்காட்டிலிப்போ
நாமுமேஓட்டிவைத்து நாலிரண்டாருமாச்சு
தேனும்ஐவர்வாழும திசைதனையறிந்துசொல்லாய்

வசனம்.

கேளும்மாமா சகுனி நாமமவனையுங்காட்டோட்டிவைத்து ஆறுவருஷமாச்சுது இதுவரைக்கும் அவர்கள் இருக்கிறதும் யிறந்துபோய்விட்டதும் அதுயெனக்குத் தெரியவில்லையே அவர்கள் உயிருடனேயிருக்கிறார்களா யிறந்துபோய்விட்டார்களா அதைத்தெரியச்சொல்லவேணும் சகுனிமாமா,

சகுனிசொல்-விருத்தம்

குருகுலம்விளக்கவந்த கொத்தவர்வசனங்கேட்டு
பரிவுள்ளசகுனிதானும்புண்புடன்மகிழ்ச்சியாகி
மருவியவிண்டுகிந்து வாழ்வனமடைந்துஐவர்
வொருமையாயிருக்கின்றார்கள் வுண்மையையுரைசெய்தேனே.

வசனம்.

கேளும்என்னருமைமருமகனாகிய துரியோதனமகாராஜனே பஞ்சபாண்டவர்களைந்துபேரும் விண்டுசிந்துரிமுனியிஸ்பார் வனத்திலே சுகமேயிருக்கிறார்களப்பா துரியோதனமகாராஜனே.

துரியோதனன்சொல்-விருத்தம்

இருக்கிறாரென்றவார்த்தை யிபலுள்ள அரசன்கேட்டு
மருக்கியேமனனர்தம்மை வதைக்கவேமனதிலெண்ணி
இருந்தியராஜநீதி செங்கோலைச்செலுத்திபாண்டு
பருதியும அஸ்தமாகப்பாக்குடன்கொலுகலைந்தார்

சபையோர்சொல்-வசனம்

அகோயிதெப்படியென்றால் தன்னுடையமாமனான சகுனிசொல்லைக் கேட்டுபஞ்சபாண்டவரையும் கொல்லவேண்டுமென்றுநினைத்து துரியோதனன் தபசியாய்வேடங்கொண்டு வருகிறவிதங்காண்க,

துரியோதனன் தபசியாய்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்

துரியோதனனும் வந்தான்-தபசுசெய்ய
துரியோதனனும்வந்தான்

துரியோதனனும்வந்தான் திசைகளெங்கும்
திரிந்துதிமிதிமிதிமிதிமியென
அந்தரமுரசுகள் துந்துமியொடுதவில்
பம்பைகளசைந்திட துரி

சிரசினில்மகுடம்புனைந்து மெய்யினிலெங்கும்
திருவெண்ணீறுமேயணிந்து
கரத்தில்ஜபமாலையும் காவிவஸ்திரம்பூண்டு
கண்டவராகரவென்றுமகிழ்ந்திட தெண்டலம்புனைகரு
[ம்குண்டலமுடனிதோ துரி

அரவத்துசம்படைத்த துரியாசன் ஆணையில்
தவங்கள்செய்யவேசற்றத்துடனேவாழ்ந்த
சதாசிவகணமெல்லாம் சம்பிரமுடனிருகாளமாமுனி
வடபெயனுறதினம்கம்பினுடிய துரி

கண்ணிற்பொறிபறக்கவே செகனத்தினில்
கருத்தில்சுவஞ்சிறக்கவே
விண்ணோர்மகிழவேமேதினியோர்புகழ
மேலிமொழிமுனிவோர்களும்மெச்சிட வித்தகன் முனிவன்
[பாதத்தைநினைந்திட துரி

துரியோதனன்-சொல்விருத்தம்

பான்மொழியுமையாள்தானும் பரமனார்பாதம்போற்றி
தான்கருத்தினிலுறைந்த தவமுனியவனேபோற்றி
மௌனமையாய்தவசுசெய்ய விரைவுடன்வந்தேனிந்த
கானகந்தனில்வாழும் காளமாமுனியேபோற்றி

தரு-இ-ம்-கெண்டா

ஐயசடைமுடிசோதியென்றேவொளிசெய்யவே தானரோகரா
சூரியன்போல்காதில் துலங்கியகுண்டலமாடவே தானரோகரா
மெய்யினிற்பூசிய நீறிந்தவெண்மதியெண்ணவே தானரோகரா
மேவிடுமாமுனிமோர்கள்கண்டதிசயித்திடவே தானரோகரா
அஸ்தத்தில்ஜெபமாலை அரகரவென்றுசெபித்திடவே தானரோகரா
அந்தரத்துந்துமிஆரோயிவனொன்றுசொல்லவே தானரோகரா
வெற்றிதரும்ருத்திராட்சமணிசந்தசைந்தாடவே தானரோகரா
மேவியதோர்காவிவஸ்திரமுமின்னவே தானரோகரா
காலில்குறடுதாளதாளவென்றொலித்திடவே தானரோகரா
தருமபுத்திரனாசவித்துமனந்தளர்ந்திடவே தானரோகரா
காளமாமுனிவன்வந்தன்னை நாடியதுரியனும் தானரோகரா
கண்டுமகிழ்ந்துகனத்தவஞ்செயதிடவந்தானே அரோகரா

கட்டளைக்கலித்துறை

மெய்யானதவசுசெய்தேன் உன்பாதம்விரும்பிநெஞ்சில்
பொய்யானகாயமிதென் றறிவேனும்மைப்போற்றுகிறேன்
பையாடவப்பணியா யனைப்பணிந்துநித்தியம
கையாறப்போற்றுமமுனியே யெனைக்காத்தருளே

துரியோதனன்சொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்

பாதிமதியணிந்தமுனிபாதம் பத்தர்மாமுகில்வித்த னே
சோதிவெண்ணீறணிந்தமுனிபாதம் தொழுதே னகமிகமகிழ்ந்தேனே
அல்லும்பகலுமுனையேதுதிசெய்து அடுத்தேன்பஞ்சாட்சரமபடித்தே [னே
இல்லறத்தாசைவிட்டேனே உம்மைநாடியிருந்தேன் தவமதுபுரிந்தேனே

ஆராதாரப்பொருளாய்நின்றருள் ஆர்த்தர்மகிழ்ந்திருள் வித்தகனே
தாராயெனக்குவரம்உகந்துமேதருவாயெந்தனமுன்வருவாயே
வஞ்சகபாண்டவரைவெல்லவேவரமருள்வாயமந்திரமருள்வாய்
சஞ்சடையாளனேநீயிரங்கென்முன்தெரிசனம்வந்துமேவரமருள்வாயே

துரியோதனன்சொல்-விருத்தம்.

மூத்தலம்பரவும்அத்தர்கன்பதத்தைமூலமாம்மதியாய்முனிவன்
கைத்தலங்குவித்துதொழுகிடுமுனதுகருணையைக்கினவிலும்மறவேன்
சித்தமுமகிழ்ந்து அடியேனுக்கிரங்கும்தேசிகாசிவனடியானே
நற்றவம்புரியுங்காளமாமுனியேநாயேனுக்குகந்துவந்தருளே

பொதுவசனம்

அஃகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் துரியோதனன் தவஞ்செய்யும்போது காளமாமுனியானவர் அதையறியும்படியாய் துரியோதனன்னண்டைக்குவருகிறவிதங்காண்க.

காளமாமுனி வருகிற-தரு-இ-ம்-காம்போதி

காளமாமுனிவந்தார்-உக்கிரமான-காளமாமுனியும்வந்தார்

காளமாமுனியும்வந்தார்கடுகிநடந்து காசினியோர்புகழீசர்பதந்தனை
னேசமதாகவே பூசைகள்புரியவே(காள)

விரித்தசடைமுடிதுலங்க மெய்யினிலெங்கு
வெண்மதிபோல வெண்ணீறிலங்க
திரிதகஜெபமாலையும் தாளினிற்பாதக்குறடும்
தண்டமுமேகையில்கொண்டிளமகிழ மண்டைமீதினில் பண்டிளமுனிவ
[ன்(காள)

காலருசியென்னன்னவே மெய்யினிலணிந்த
காவிவஸ்திரம் மின்னவே
சூலமாம்பூவேந்தத். தூய்யஞானபதத்தை
அதிசெய்யுமடியவரதிசயமித்துவெனகொதிசினமழுகியமதியினி
லுயர்தரும்(காள)

தேவரெல்லாந்துதிக்க முனிவரெல்லாம்
செயசெயவென்று துதிக்க
மூவர்பதத்தையுன்னி மூலமந்திரம்பண்ணி
முத்திநிதித்தவமுத்தமர்க்குள் மிகுந்ததவத்தைதனினைத்திடும்
வித்தகன்(காள)

-9

துரியோதனன்சொல்-விருத்தம்

ஐயனேபோற்றிபோற்றி அருந்தவதரசேபோற்றி
துய்யநல்முனியேபோற்றி துரியனென்றறியுமையா
பையல்கானனமில்நின்று பாங்குடன்றவமேசெய்தேன்
வெய்யவேவரந்தானிப்போ வேண்டியதருள்செய்வீரே

வசனம்.

சரண்ஞ் சரணம் முனிநாதா உம்மைவேண்டி தவம்புரிந்தேன் தேவரீலாக்கண்டு காட்சிபெற்றேனையா முனிந்தா.

காளமாமுனிசொல்-விருத்தம்

எந்தனைநோக்கிநீதான் இனித்தவஞ்செய்ததேது
சந்தனக்காவகையெனனை தணலதாய்வீசுதப்பா
முக்தியவரங்கொடுக்க முனிவனுனவந்தேனிப்போ
சிந்தையினினைவமன்னு சீக்கிரமுரைசெய்வாயே

வசனம்

கேளும்பிள்ளாய் துரியோதனு நீயென்னைவேண்டி வந்தவரம் தடையில்லாமல் தருகிறேன் சொல்லும்பிள்ளாய். துரியோதனு

துரியோதனன்சொல்-விருத்தம்

ஐயநின்றவபலத்தால் அவனியையொருகுடைக்கீழ்
மெய்யனுனும்வெற்றி பெற்றநன் விளாவில்நீரும
துயயனைபெனையிடேத்த வெண்மதிதுலோத்தலாறு
செய்குவாயென்றுமன்னன் திருவடிவணங்கிச்சொன்னான்

வசனம்

கேளுஞ்சுவாமி முனிநாதா தேவரீர்செய்யும் தபோபலத்தினுலே அடியேனுக்கு வேண்டியவரந் தரவேண்டுமையா சுவாமி முனிநாதா

காளமாமுனிசொல்-விருத்தம்

தபஞ்செயுமுனிவோருக்குத் தவிழ்ந்தவாக்குனாப்பாருண்டோ
அபஸ்தமென்படியதாக அரனுமேஅறிபச்சொன்னேன்
விபரமாயெனக்குச்சொல்வாய் வேகதனோாசதிரா
செபமாலையறியயாஞஞ் சீக்கிரமருள்வேன்பிள்ளாய்

வசனம்

கேளும்பிள்ளாய் துரியோதனா பரமேஸ்வரனுக்குச்சமானமான இந்தசெபமாலையறிய நீகேழ்க்கப்பட்ட வரந்தருகிறேன் சொல்லும்பிள்ளாய் துரியோதனா.

துரியோதனன்சொல்-விருத்தம்

காளமாமுனியேகேளாய் கருத்துள்ளஐவாதம்மை
நீளமா வனத்திற்சென்று நீயொருயாகஞ்செய்து
காளகண்டிகைபூதத்தால் காளையர்தம்மைக்கொன்று
ஆளவேயெந்தனுக்கு அரசளித்திடுவீரையா

வசனம்,

கேளும்முனிநாதா என்பகைஞராகிய தருமபுத்திரர்களை காலகண்டிகையென்றுசொல்லப்பட்ட பூதத்தையேவி கொல்லவேண்டுமையா சுவாமீ முனிநாதா

காளமாமுனிசொல்-விருத்தம்

கொல்லுமென்றுரைத்தாயந்தகொற்றவரைவருக்கும்
வல்லமைமிகபெற்றுளும் மாயவன்கிருபையுண்டு
சொல்லுமந்திரந்தானம்மைச் சுடுவதல்லாமற்சென்று
வெல்லுமோவெல்லாதப்பா வேந்தனேதுரியமன்னா

வசனம்.

கேளும் பிள்ளாய் துரியோதனா பாண்டவர்களைந்துபேரையுங்கொல்லச்சொன்னாய் பாண்டவர்களைந்துபேரும் பலசாலிகள் அதுவும் மல்லாமல் ஸ்ரீ கிருஷ்ணசகாயம் பெற்றவர்கள் ஆகையால்நாம்செயயும் பொல்லாங்கு நமக்கேவந்துலபிக்கும்பிள்ளாய் துரியோதனா

துரியோதனன்சொல்-விருத்தம்

சந்திரசூரியரேநீக்கள் சாட்சியிவ்வார்த்தைக்கெல்லாம்
முந்தியவரந்தானிந்தமுனிவரும்யெனக்களித்தார்
செந்திருவடிவாயுள்ள செபமாலையதியச்சொனனார்
மந்திரமுனிவருக்கு வாக்கிரண்டுண்டோசொல்வீர்

வசனம்.

கேளும்சுவாமி முனிநாதா இதோ நீர்சொன்ன சொல்லுக்குச் சந்

திரசூரியர்களே சாட்சியாகவைத்தேன் இப்போ நீர்கொடுத்தவரம் பொய் யாகப்போகுது கெடுணநேரத்திலே பாண்டவர்களைக் கொல்லவேணுமை யா சுவாமி.

காளமாமுனிசொல்-தேவாரம்

ஆலமேயுண்டாய்போற்றி அம்பிகைபாகாபோற்றி
சீலமாம்ஐவருக்கு செல்வமேஅளித்தாய்போற்றி
சாலவே துரியன்செய்யும் சதிதனையறியேன்யானும்
பாலனுக்கருளேசெய்யும் பரனேவுன்பாதம்போற்றி

காளமாமுனி-புலம்பல்-தரு-இ-ம்-உசேனி-ரூபகம்

பொய்யுளையாலேபிழைவந்துநேர்ந்துதே சங்கரா-சங்கரா
எந்தன்புத்தியினல்தவம்பொய்யாய்முடிந்ததே சங்கரா-சங்கரா
மெய்யாமதர்மத்தைவெல்லுமோ சங்கரா-சங்கரா
எந்தன்மேலானவிதிப்பயன்மேல்வந்துநேர்ந்துதே சங்கரா-சங்கரா
பஞ்சவரைக்கொல்லபழிகாரனுனேனே சங்கரா-சங்கரா
பொல்லாதபாதகன் துரியன்பழிசெய்ததறியேனே சங்கரா-சங்கரா
கொல்லுவேனென்றுநான்கூறினேனென்னசெய்வேன் சங்கரா-சங்கரா
அல்லல்வந்துயிப்போ அவதியாய்நேர்ந்துதே சங்கரா-சங்கரா
ஆழமறியாமல்காலிட்டுக்கொண்டேனே சங்கரா-சங்கரா
அறியாமல்வந்துநான் அகப்பட்டுக்கொண்டேனே சங்கரா-சங்கரா
ஆலமுண்டவர்போலே அலையுதேயென்னெஞ்சம் சங்கரா-சங்கரா
அண்டக்கலமெனையாளுவாய்தஞ்சம்

காளமாமுனிசொல்-விருத்தம்

பாவிகீ துரியாகேளாய் பாண்டவர்பாவத்தாலென்
ஆவியையிறக்கச்செய்தாய் அரசனேராசதிரா
தாவியேபாவம்வந்து தலைசுமைசுமந்துக்கொண்டாய்
மூவியமுனிவர்பாவம் மூண்டது உன்னைத்தானே

வசனம்.

கேளும்பிள்ளாய் துரியோதனு பாண்டவரைக்குலேசமாயுங்கொல்ல ச்சொன்னாய்? உன்சொல்லைக்கேட்டு நான்தவமிழந்தேன் ஆகையால்அந்த பாவமெல்லாம் உனக்கேவந்து லபிக்கும் பிள்ளாய்துரியோதனு.

துரியோதனன்சொல்-விருத்தம்

பாவந்தான்வந்தாலென்ன பாண்டவரிவர்தம்மை
ஏகவேசெய்தீரானல் என்மனந்திருப்தியாகும்
பூவுலகறியச்சொன்னேன் புண்ணியரிஷியேயென்று
ஆவலாயுரைத்துமன்னன் அஸ்தினபுரமேசென்றான்

சபையார்சொல்-பொதுவிருத்தம்.

செப்பருமுனிவன்தானுஞ் சிந்தையில்தியானஞ்செய்து
தப்பெருங்கள்ளிக்காலிற் சார்ந்துபாரிடங்கள்தோறும்
ஒப்பெரும்ஆனையோடுங் கேசரிமுதலாயுள்ள
அப்பெருமலையினசாரில் அருமுனியாகஞ்செய்தார்

காளமாமுனிசொல்-தேவாரம்

திக்களுக்கங்கைசூடும் திருக்கண்ணாபோற்றி
பொங்கரவணிந்தாய்போற்றி பூதவாகனனேபோற்றி
செங்கைவேலவனையீன்ற தேவனேபோற்றி
சங்கராவுனதுசெம்பொற்றாளினை போற்றிப்போற்றி

காளமாமுனிசொல்-தரு-இ-ம்-கெண்டா.

வெள்ளியங்கிரியோனே	ஆகரா
விடையோனே-சூலபடையோனே	ஆகரா
வள்ளியாகனையீன்ற	ஆகரா
வரந்தந்தருள்வாய்வரந்தந்தருள்வாய்	ஆகரா
எமனையுதைத்தோனே	ஆகரா
ஈஸ்பரனே பரமேஸ்பரனே	ஆகரா
காமனையெரித்தவனே	ஆகரா
காரணனேஎழில்நாரணனே	ஆகரா
பாம்பணிசடையோனே	ஆகரா
பங்கையனேகோயிற்செங்கையனே	ஆகரா
சாம்பசதாசிவனே	ஆகரா
சங்கரனேகங்காதரனே	ஆகரா
செங்கையில்மழுவெடுத்த	ஆகரா
சேகரனேகிருபாகரனே	ஆகரா

ஐங்கான் றனையழைக்கயின்ற அரகரா
ஆண்டவனேசபைதாண்டவனே அரகரா

சபையோர்சொல்-பொதுவிருத்தம்

கானகந்தன்னிலைவர் கருத்து னிருக்கும்போது
காவலர்க்கதிபனான கர்த்தரும்தானறிது
மாமுனிவிண்டுசிந்து வனத்தினில்ஐவர்முன்னே
மானெனும்வடிவுகொண்டு மாவியும்வருகிறானே

பொன்மான்வருகிற-தரு-இ-ம-கலியாணி-அடதாளம்

பொன்மானும்வந்ததையா-தர்மர்பக்கல்
பொன்மானுமவந்ததையா
பொன்மானும்வந்ததுமன்னர்தர்மர்பக்கல்
உன்னிதமாகவேவுயரக்குதிகுதித்து (பொன்)

மின்னல்மின்னினைப்போலேமேனிநடுநடுங்க
அன்னடையாள்சத்தி அழகுதுரோபதைமுன்னின்
கள்ளப்பார்த்துகடுகநடைநடந்து
மெள்ளமெள்ளப்படுத்துதுள்ளிதுள்ளிக்கொண்டு
அஞ்சாமல்மாயமான் அணைநொடிதன்னிலே
கொஞ்சிகொஞ்சிக்கொண்டுகுதித்துவிளையாடி (பொன்)

பொதுவசனம்

அகோதெப்படியென்றால் விண்டுசிந்து முனியீஸ்பரர்வனத்திலே பாண்டவாள் சஞ்சரிக்கும்போது அவர்களைக்காக்கும்படியாய எமதர்ம்ம ராசன் மானவேஷங்கொண்டு வருகிறதை துரோபதைபார்த்து சொல்லு கிறவிதமெப்படியென்றால்.

துரோபதைசொல்-விருத்தம்-கும்பகாம்போதி

பார்தனிலுயரும்நீதி பஞ்சபாண்டவரைக்காண்பாள்
சீர்பெறும்அனலில்வந்த செந்திருவடிவமின்னாள்
கார்நிறைகுழல்பாஞ்சாலிகன்னியும்தர்ம்மர்பாதம்
ஏர்பெறப்பணிந்துவாழ்வையீயம்பிடத்துடங்கினளே

துரோபதைசொல்-தரு-இ-ம.

மன்னவரேயிம்மான்வடிவில்மிகுந்தஜெந்தன்
மனதின்படியேகொண்டுவாரீரோ சுவாமி

சொன்னவசனமதைத்தவறுமலெந்தனுக்கு
துடர்ந்துபிடித்துத்தாரீர்மன்னவரே சுவாமி

இந்தமான்றன்னைப்போலெயெந்தவனத்திலும்
இதுவரைக்குங்கண்டிலேன்மன்னவரே சுவாமி

தொந்தமாகப்பிடித்துதோகைதனக்களிப்பீர்
சொல்லியருளும்பிராணநாதரே சுவாமி

முன்னாள்ஜானகிமுன்னில் மான்றந்ததென்று சொல்லி
மொழிந்ததெல்லாமறியேனமன்னவரே சுவாமி

இந்நாளெந்தன்முன் வந்தபொன்மான்றன்னைப்பிடித்து
எந்தனமனமகிழ்வீர்மன்னவரே சுவாமி

வீமருடன்விசையர்குலசகாதேவர்
விருதுபெறத்தம்பினல்வர்மன்னவரே சுவாமி

தாபமணிமார்பர்களிருக்கஅவரையேவி
தனிமானகொணர்ந்துதரச்சொல்வீரே சுவாமி

துரோபதைசொல்-கட்டளைக்கலிப்பா

சந்திரன் குலம்வந்திடும்பாண்டுவின் தனயராகிய சற்குணநாயகா, வந்திடும்பொன்னின் மானது தானுமே வடிவினிற்சிறந்தோங்கிய தாகையால்,எந்தன்முன் கொடுவந்திடும் வீரனேற்கேர்க்கவே விளையாடிடுமந்தனற், சுந்தரஞ்செறிமாது துரோபதை சொல்லியே பின்னுஞ்சொல்லத்துடங்கினள்.

துரோப்தைசொல்-ஜம்பை

எந்தநாயகரேநீரிந்தமான்றனைத்துடர்ந்து
அந்தமானெந்தனுக்குஅளித்தருள்செய்வீரோ
விந்தையுள்ளயிவ்வனத்தில்மேவுமிந்தமானைபோலே
சுந்தமிகுங்கானகத்தில்கண்டற்கிலேனே
கனகநிறமாகியதோர்கலைதன்னையே துடர்ந்து
மனமகிழவெந்தனுக்குவண்மைபெறவருள்வீர்
ஜெயமுறுநற்றம்பியரைநீருடனிவ்வனத்தனுப்பி
நயம்பெறும்பொன்மான்றன்னைநாயகிக்குவளிப்பீர்

...ர்மைமிகுபுனையுனையுடைசத்தியவானிகளிறை
புண்ணியரேமானையிப்போதேயெனக்களிப்பீர்
சித்தமகிழ்ந்தேயானும்சிருடன்விளையாட
புத்தியுள்ளமான்தன்னைபரிந்தளித்திடுவீர்

துரோபதைசொல்-வசனம்

கேளும்என்பிராணநாதா இந்தமானைப்பார்த்தால் வெகுசவுந்தரியமாக யிருக்கிறது ஆகையால் அந்தமானைப்பிடித்து தரவேண்டும் சுவாமியென் பிராணவல்லபா,

தர்மர்சொல்-விருத்தம்

தேன்மொழிமாதேநீதான் செப்பியபடியேநாங்கள்
கானகந்தன்னில்யேவி கலைதனைத்தொடர்ந்து அந்த
மான்தனைப்பிடித்துஉந்தன் வசத்திலொப்பிப்போம்கண்டாய்
ஞானமாமுனிவரண்டைகலமுடனிருந்திடாயே

வசனம்

கேளாய்பெண்ணே துரோபதா நீ இந்தமுனி கூட்டத்துடனே பன்னகசாலையிலே இருப்பாயாகில் நாங்கள் போய்மானைப் பிடித்துவருகி றோம் பெண்ணே துரோபதா

தர்மர்சொல்-விருத்தம்

மதியினுலுயரும்தம்பி மார்களேசொல்லக்கேளீர்
கதிதனிலுயருமானைக்கானகத்துரத்திமற்ற
கெதைமுதல்வில்வாளரேன் இட்டிவேமானைப்பற்றி
அதிசயமாகமாதுக் களிப்போம்நீர்வருகுவீரே

வசனம்,

கேளுங்கள் என்னருமைத்தம்பிமார்களே இந்த மானைப்பார்த்தால் வெகுசவுந்தரியமாகயிருக்கிறது அதைப்பிடித்துநம்முடையதுரோப்பதைக்கு தருவோம் வாருந்தம்பிமார்களே.

தர்ம்மரும்-தம்பிமாரும்-மான்பிடிக்கிற-தரு-இ-ம்-அடாணா

மானைப்பிடித்துவருகுவோம்வாரீர்-நீரையோரே-அந்த
மானைப்பிடித்துவருகுவோம்வாரீர்

மானைப்பிடித்துவருவோம்   அந்த
மாதுவசத்தில்தருவோம
வையகமெல்லாஞ்சுற்றி   கையில்விஸ்லம்பொற்றி
எய்யுமெர்தன்னை   பையடைந்திதோ(மானை)

அடுத்தவர்களைக்கொடுக்கும்பாவிகள்போலந்தமாயமானும்
அதட்டியுடனேயாப்   பரிக்குதே
பிடித்தவில்லிலம்   பேற்றி
பிரியமான்மனங்   தேற்றி
பேதைத்துரோபதா   மாதுதனக்கந்த
நீதிதவறுமல்   சாதகமாயிந்த (மானை)

கெம்பிரத்துடன்மானும்வந்துதே   முன்னில்லாமல்
கொடியகானில்முடுகி   யோடுதே
அம்பினுற்கொல்லாமலே   யதை
அடுத்தருகிற்சொல்   லாமலே
அற்புதமேயின்று   கைப்பிடியாகவே
செப்புமொழிக்கொரு   தப்பிதம்வராமல்(மானை

முன்னென்றும்பின்னென்று யொளிப்பவர்போ
முகதியெதிர்வந்து   பதுக்குதே
சின்னபின்னஞ்செய்யாம   லதை
சிதையஅம்பினுற்கொல்   லாமலே
சேர்த்துபிடித்துநாம்   கூந்தல்விழக்கனை
வாழ்ந்ததுரோபதை   மாதுதனக்கந்த(மானை

பொது-வசனம

இந்தப் பிரகாரம் பாண்டவாள் மானைத் துரத்திக்கொண்டுபோகிறபோது பிராமணுள் அபையமிட்டுக்கொண்டுவருகிறவிதங்காண்க

பிராமணுள்-அபையமிடுகிற-தரு-இ-ம்.

அபையமையாதர்ம்மராஜ   கோவே-ஒருமாண
ஆசனத்தைப்பறித்துப்போகுதையா

13

உபயமானபொன்மான்தான்குதித்து நாலை
உறுதியாகப்பறுத்துப்போம், ஐயா

செயமதாகயெந்தன்பூணநூல்தன்னைப்போ
சீருடனேபறித்துப்போகு ஐயா

ஐயையோயிந்தகானகத்தில்பொன்மான்
அலையவேபூண நூலைபறித்து ஐயா

வீமனுரேகாங்களென்னசெய்வோம் ஓப்
விஜையனுரே அபய அபய மையா

உபையமான்சிவபூநூல்தன்னையிப்போ
உத்தமரேபறித்துத்தாரு மையா

பிராமணாள்சொல்லும்-கவி.

அறையம் அபையம்தர்மபுத்திரா
அபையம்அபைப்பம்தோர்வீமா
அபையம்அபையம்போர்விஜையா
அபையாகுலசகாதேவர்களே

வசனம்

அபைய அபையம் தர்மார்சனே எங்களுடைய பூணநூலையும் ஆச ன்த்தையும் எதோ ஒருபொன்மான் வந்து பறித்துப் போகுது அதை எங் களுக்கு தருவியும்பிள்ளாய் தர்மபுத்திரர்களே

தர்மர்சொல்-விருத்தம்.

மூந்திவந்தபையமென்ற முதுமறையோரேநீர்தான்
சிந்தையில்வேறெண்ணாமல் செபதபமுடித்துக்கொண்டு
பந்தமாயிருப்பீருங்கள் பாரியபூணநூலும்
அந்தமாங்கலைத்தோல்கூட அனிப்போமிங்கிருந்திடரே

வசனம்

கேளுங்கள் சுவாமி வேதியர்களே உங்களுடைய பூணநூலும் ஆச மூன் கொண்டுவந்து தருகிறோம் இவ்விடத்திலே தானே யிருங்களையா சு வாமி வேதியர்களே

தர்மர்-தம்பிக்குச்சொல்-விருத்தம்.

அருமறையோர்களவந்து அபையமென்றுரைத்தவார்த்தை
பெருமையாய்நாமுங்கேட்டுப் பேதைபோலிருக்கலாமோ
உரியவில்கணைதன்னைக்கொண்டு வோடியேமானைப்பற்றி
மருவுமுப்புரிநூலாடை மறையவர்க்களிப்போமலாசீர்.

வசனம்.

கேளுங்கள் என்னருமைத்தம்பிமார்களே பிராமணாள் ஆசனமும் பூணநூலையும் கொண்டுபோன பொன்மானைப்பிடித்து வருவோமவாருங்கள் என்னருமைத்தம்பிமார்களே

தர்மரும்-தம்பிமாரும-மானைத்துரத்துகிற-தரு-இ-ம்.

தென்டிறைமேல்பிணைமோதவே பொன்மான்தன்னை
சிலையினால்வில்விஜையனெய்யவே
வல்லபதிதினால்சகுலன்தாக்கவே பொன்மான்தன்னை
வாளினால்சகாதேவன்வீசவே
சினத்துடன்மானபதுங்கியோடவே ஐவர்தானும்
சென்றுவாளால்சிதைக்கவெய்யவே
கனத்தகேவகமாகியமானும் பாண்டவர்களை
கண்டுபயத்துகதறியோடவே
குதிப்பறிசதுகொடாதபர்விகள் போல்மாயமானும்
கொடியகானில்மூடுகியோடவே
சிறப்புடனவஞ்செய்திடலாமோ பாண்டவர்களும்
தேடித்திகைத்துவாடிமெலியவே
வஞ்சகமாகியமானும்ஐவரை கொடியகானில்
வருத்தஞ்செய்துடன்மாயமாச்சுதே
பஞ்சவர்களுந்தாகசோபத்தால் மெலிந்துவாடி
பாரில்நின்றுபாதவிக்கின்றார்

சபையோர்சொல்-பொதுவிருத்தம்

விசையதாய்மானுமோட வேகமாய்துரத்திமானை
திசையெங்கெங்குந்திரிந்துதேடியுமான்காணாமல்
அசைவிலாப்பதுமைபோல அரிமுகுந்தனைநினைத்து
இசைபெறும்தர்மராயர் இளைஞரைநோக்கிசொல்வார்

தர்மாசொல்-விருத்தம்.

நலமதுபுரியமானை நாடியேதேடிவந்து
பிலனது அழியயிங்கே பிர்ம்மாவுமெழுதினை
நிலமதுதரியாதாக நெஞ்சுதான்வரண்டுடைதயோ
நலமதுகொண்டுவந்தால் சாகாமற்பிழைப்பேன்றம்பி

வசனம்.

கேளும் தம்பிசகாதேவராஜனே எனக்கானுல் தாகம்பொறுக்கப்போ கவில்லை சீக்கிரமாய் சலங்கொண்டுவாரும்தம்பிசகாதேவராசனே.

சகாதேவன்சொல்-விருத்தம்

தண்மையில்மிகுந்தயெந்தன் தமையனேசொல்லக்கேளீர்
வண்ணமாங்கானிலேயிவணூடன்சலமேகொண்டு
கண்ணவே அநாநாழிக்குள் கடுகியேவருவேன்யானும்
திண்ணமாயிவ்வனத்தில்சீருடனிருந்திடீரே

வசனம்

கேளும் என்பிதாவிக்குநிகரான அண்ணாவே நான்போய் சலங்கொண்டுவருகிறேன் நீங்கள் இவ்விடத்தில்தானே யிருங்கள்என் அண்ணாவே

சகாதேவன்சலத்துக்குவருகிற-தரு.

சகாதேவராசன்வந்தான்-சலத்தைத்தேடி
சகாதேவராசன்வந்தான்

மகாவேதசாஸ்திரம்மனதிற்றெளிந்திருந்து
இகபரசாதனமிரண்டுமெறிந்திடும் சகா

வஞ்சன் துரியன்செய்த வஞ்சனைகபடத்தால்
சஞ்சரித்திடவந்த பஞ்சவனவரில் சகா

காலும்மானுகவும் கானகமோடவும்
மேலும் அநதப்பிடிக்க மேலாம்புனலெடுக்க சகா

முரசக்கொடியுடைய அரசன்தர்மராசன்
வரிசையுடனனுப்ப துரிதமாய்கடந்து சகா

சகாதேவன்சொல்-விருத்தம்

அன்னவலரின்சொற்கேட்டு அதிதுரிதத்தில்வந்து
வண்ணமாக்கான்புகுந்து வனமுதல்திரிதலைந்து
திண்ணமாஞ்சுனைபள்ளங்கள் சிறுடனதடாகம்வாவி
கண்ணிலுங்காணேனையோ கர்த்தனேயென்னசெயவேன்

சகாதேவன்சொல்-புலம்பல்-தரு

தாகத்தாலேயிந்த தனமுழுதுந்திரிந்துந்
தடாகமொன்றையுங்காணேனையோ
ஆபத்தாலேஓடி தேடினாலுமொரு
அரசனைகாண்கிலேனையோ
காட்டிலுள்ளநதிகள்தேடி வந்தேனிப்போ
காணுதையோபொய்கை தோணுதையோ
முன்னவர்க்குதாகந்தீர்க்கவேநான்
மொண்டுதீர்த்தமெப்போகொண்டுபோவேனையே

பொது-விருத்தம்,

ஓடியேமலையுங்காடும் உயர்ந்தனற்சகாதேவன்தான்
தேடியேவந்துநச்சு தீர்த்தமாமபொய்கைகண்டு
வாடியதாகத்தாலே வாரியுண்டிருண்டுகண்கள்
நீடியகரைமேல்வந்து நினைவிலாமூர்ச்சையானான்.

தருமர்சொல்-விருத்தம்,

வெம்பியதாகத்தாலே வேகமாய்தீர்த்தந்தன்னை
தம்பியைகொடுவாவென்றேன் சகாதேவன்வரவுங்காணேன்
தம்பியேயெனதுநெஞ்சந் தவித்துயிர்போகுதையோ
தம்பியுங்கூட்டிக்கொண்டு சலங்கொண்டுவருவாயப்பா

வசனம்.

வாருந்தம்பி நகுலராசனே தம்பிசகாதேவனை சலத்துக்கு அனுப்பிவைத்தேன் அவன்இன்னம்வரக்காணேன் நீபோய் தம்பியையுங்கூட்டிக்கொண்டு சலமுங்கொண்டு சீக்கிரமாயவாருந்தம்பி நகுலராசனே

15

பொது-விருத்தம்.

நல்லியல்தெரிந்ததர்மர் நகுலனைநோக்கிப்பின்னும்
சொல்லுமுனகணத்திலேகி தீர்த்தமுங்கொடுவாவென்ன
துல்லிய அசுவலட்சணம் சேர்மையறியுஞ்சூரன
சொல்லியமொழிதப்பாமல் துரிதமாய்வருகின்றானே

வசனம்.

அகோதெப்படியென்றால் அந்தச்சமையத்திலே நகுலராசன் தம்பி
சகாதேவனையும் சகலதடாகத்தையுந்தேடிக்கொண்டுவருகிறவிதங்காண்க

நகுலன்-சகாதேவனை-தேடிவருகிற-தரு

நகுலராசனும்வந்தானே-அதிவேகமாய்
நகுலராசனும்வந்தானே

இலகுமகுட-மின்னஎறிவாள் காத்திலேந்தி
சலங்கொண்டுவரச்சொன்னதமயன்சொல் தவறாமல்(நகுலன்

நீடியவனத்தைநாடி நேரினையோனையுந்தேடி
வாடியதர்மர்தாகம்வண்மையாய்த் தவிர்ப்பேனென்று(நகுலரா

துன்னியகானில்துணைவன் சொல்லியபடியேயேகி
முன்னவன்சகாதேவனை யுனவிதமாகவேதேடி(நகுலரா

கனனும்பஞ்சடையவே கானகவெங்குமோடி
வர்ன்னமுகில்மேனிமாயன் மலர்ப்பதந்தனைநாடி(நகுலரா

நகுலன்-தம்பியைத்தேடுகிற விருத்தம்

கரிமிகுபரியனங்கள் காய்ந்திடுமநகுலனதானும்
மருவியகானந்தன்னி லுரியதோர்மலையுமகுண்ணனும்
சதிருடனகடந்துயர்ந்து நடாகமுந்தேடிப்பின்னும
மதியினிலுயர்சகாதேவன் தனைத்தேடிவருகின்றானே

நகுலன்-புலம்பல்-தரு

தம்பியுங்காணேன்தடத்தையுங்காணேனே சங்கரா-சங்கரா
தனிவனம்வந்துநான் தவித்துப்புலம்புவேன் சங்கரா-சங்கரா
நாடுதுவ்வனந்தன்னில் நற்றம்பியுங்காணேன் சங்கரா-சங்கரா
நானையமாகிய பொய்கையுங்காணேன் சங்கரா-சங்கரா

வாடியிளைத்துமனம்நொந்துதென்செய்வேன் சங்கரா-சங்கரா
மன்னனைக்காணாமல் மதியும்மயங்குதையோ சங்கரா-சங்கரா
அமியும்வண்டுந்துளைத்திடுங்காட்டினில் சங்கரா-சங்கரா
பூங்காவிலெங்கும் புனலையுங்காணேனே சங்கரா-சங்கரா
புனல்தந்துரட்சிப்பாய்பூபதியார்கருமே சங்கரா-சங்கரா
[illegible] பூமியிலலைந்தென்செய்வேன் சங்கரா-சங்கரா
வேதனையாலேமெலிந்துயிர்வாடுதே சங்கரா-சங்கரா

நகுலன்சொல்- தேவாரம்

ஏரிமழுகரத்தணிந்த யீசனேபோற்றிபோற்றி
அரியயன்காணாமூலத தரும்பொருள்நாதாபோற்றி
மருவு கானகந்தனில் வந்துதானதம்பிரானை
பிரியமாக்காணுமையின் ஒரு பாகனேபோற்றிபோற்றி

நகுலன்சொல்-புலம்பல்-தரு

காடுபூமிநாமிழந்தோம் நல்லசுகம்நாமிழந்தோம்
காடுதனனில்வந்திடத்தே கந்தமூலந்தின்றிருந்தோம்
விண்டுசிந்துமுனிவனதில் மேவியிருந்தோமையா
பண்டுசெய்தபாதகத்தாலே பாரியமான்முன்னேவந்து
சிறப்பினில்மிருகமானை துரத்திடயாரும்போனோமையா
ஆதிமறையோர்கள்வந்து ஆசனத்தைத்தருவீரென்றார்
சேதிசொல்ஐவர்நாமும் தேடியேவந்திடத்தே
அறவுயிர்செய்யுமானை அடவிதனிலதுரத்திவந்தோம்
மன்னவனார்தர்மரப்போ வண்மையுடன்மூர்ச்சையானார்
ஈனவிதமோ அறியேன்யானும் எனதண்ணவரவழைத்து
நாவுலர்ந்துபோகுதையோ நல்லசலங்கொண்டுவந்தால்
ஆவியுயிர்செய்யுந்தம்பி ஐவருக்கிளையக்காவே
தேடியேவருதுநாளும திகைத்துப்புலம்புறேனே
கோடியர்விடையிலேனும் குன்றைவில்லிகாருமையா

நகுலன்சொல் - விருத்தம்.

தியங்கியேமயங்கிநின்ற சிந்தையும்மிகவேநொந்து
மயங்கியேசோபமாகி வல்லாண்மையுள்ளராசன்

தயங்கியேமயங்கிநின்று தம்பியைக்காணாத்தாலே
பயங்கரமுடனேதேடிப் பாங்குடன்கண்ணில்கண்டான்

நகுலன்சொல்-தரு

சங்கரன்கிருபையாலே சகாதேவன்தன்னைக்கண்டு
துகைமுள்ளநகுலன்யானும் துணைவனையிழந்தேனையோ
என்னசெய்வேன்தம்பியென்று எடுத்துமாரோடணைத்துக்கொண்டு
மூனவர்க்கென்னசொல்வேனென்று முகத்திலறைந்துகொண்டு
தமையனிடசொற்படிக்கு தண்ணீர்கொண்டுவரவந்தாய்
அனைபுரவிதிபடியோஐயோசகாதேவா தம்
வண்மையுள்ளசாஸ்திரங்கள் வகையறிந்தம்மானவனே
மண்ணின்மேலிறந்ததினால் மகாபாவியானேனையோ
அருமையுள்ளதம்பியரே அண்ணலதமக்கென்னசொல்வேன்
வரும்விதிஅறிந்திலேனே மாயவனார்தனசெயலோ

நகுலன்-தண்ணீர்குடித்து-இறக்கிற-பொதுவிருத்தம்

வாடியேநகுலன்தானும் வலியதோர்தாகத்தாலே
நாடியேபொய்கைதன்னை நஞ்சென்றுமதிக்கிடாமல்
கூடியசலத்தைக்கையால் கொப்பெனவருந்தும்போது
நீடியகரைமேல்வந்து நினைவில்லாமூர்ச்சையானான்

தர்மர்-அருச்சுனனுக்குச்சொல்-விருத்தம்

அந்தவாறறியாமல்தான் அர்ச்சுனன்தன்னைநோக்கி
சிந்தையுமிகவேநொந்து சீருள்ளதம்பிமாரை
பந்தமாய்த்தேடிப்பார்த்து பாங்குடன்சலமேகொண்டு
சுந்தரமாகநீயுஞ் சுருக்குடன்வருவாய்தம்பி

வசனம்,

வாருந்தம்பி அர்ச்சுனராசனே சலத்துக்குப்போன தம்பிமார் இரண்டுபேரும் இன்னம்வரக்காணோம ஆகையால் நீ சீக்கிரமாகப்போய்சலங்கொண்டு தம்பிமாரையுங்கூட்டிக்கொண்டுவாருந்தம்பி அர்ச்சுனராசனே,

அர்ச்சுனன்-தம்பிமாரைத்தேடிவருகிற-விருத்தம்

வெம்பியதாகத்தாலே விடாயதுகொண்டதர்மர்
தம்பியாங்காளைதன்னை சலமதுகொடுவாவென்ன

தம்பிமார்தன்னைத்தேடி சந்தியமனதிலெண்ணி
அம்புவிமுழுதும்பார்க்க அர்ச்சுனன்வருகின்றானே

அர்ச்சுனன்-புலம்புகிற-தரு

எந்தன் தம்பிமாரையெப்போநான் காண்பேனோ சிவனேதான்
வந்தவழிகளும்வாவியுங்காணேனே சிவனேதான்
மாயன்கிருபையால்மன்னரைக்காண்பேனோ சிவனேதான்
தாயகமாயெந்ததடக்கையுங்காணேனே சிவனேதான்
என்னுடெல்லாமென்னணியேங்குதுயென்னெஞ்சம் சிவனேதான்
முன்னால்செய்தவினைமூண்டிட்டதாவென்செய்வேன் சிவனேதான்
தாகசோபத்தினால்தாங்களிறந்தார்களோ சிவனேதான்
திரோகந்துடித்துநான் தீமெழுகானேனே சிவனேதான்

பொது-விருத்தம்

என்னிட தம்பிமார்கள் எப்பனுன்காண்பேனென்று
தன்னிளமனதுநொந்து தயங்கியேமயங்கிநின்று
முன்னமேநச்சுப்பொய்கை முடுகியேவந்துகண்டு
பின்னுமேதம்பிமாரைப் பிரியமாய்கண்ணினிற்கண்டான்

அர்ச்சுனன்சொல்-தரு

என்னென்றுசொல்லுவேன்யிந்தவிதிக்குநான் தம்பிமாரே
அண்ணல்கேட்டாலினி ஆவிவிடுவாரே தம்பிமாரே
தம்பிமாரைக்கண்டுதயங்கவுமாச்சுதே தம்பிமாரே
வெம்பியேதர்மர்விடாயபட்டிருப்பாரோ தம்பிமாரே
உங்களைவிட்டுநான் ஒருக்கணமிருப்பேனோ தம்பிமாரே
எங்களைவிட்டுநீரெப்படிமாண்டீரோ தம்பிமாரே
காடுஞ்செடிமலைகள்கானகத்திலேசுத்தி தம்பிமாரே
தேடியேவந்திங்கேதிகைத்துநின்றுவிட்டேன் தம்பிமாரே

அர்ச்சுனன்சொல்-விருத்தம்

பிறிந்திருந்தறியேனையோ பேதமைதம்பிமாரே
செறிந்திடும்வனத்தில்நீங்கள் தியங்கியேமனதுநொந்து
பரிந்துயிரிறந்ததேன்றி பாவிநானறியேனையோ
இருந்துநான்பார்த்திருக்க யீசரும்விதித்திட்டாரோ

அருச்சனன்சொல்-புலம்பல்-தனி.

என்னசெய்வேன்தம்பிமாரே எழுந்திருந்துபேசீர்களோ
அண்ணசெய்தபாவந்தானோ ஆயனவிதிப்படியோ
வாரேனென்றுநீகளிந்த வனத்தில்வந்துமாண்டீர்களோ
காரணத்தால்நீகளிந்த கானில்வந்துமாண்டீர்களோ
மூத்தவனார்தர்மிட முன்னின்று நானென்னசொல்வேன்
காத்தனைமாதன் பீமனுக்குக கன்னியர்க்கும்மேதுசொல்வேன்
அருமையுள்ளதம்பிமாரே அண்ணல்தமக்கென்னசொல்வேன்
வரும்விதிஅறியேனையோ மாயவனேயேதுசெயவேன்

அருச்சுனனசொல்-விருத்தம்.

தம்பிமார்படுத்திருக்கும் தன்மையைவிஜயன்கண்டு
வெம்பிநீயபிரலாபித்து மெத்தவேதாகமாகி
சொம்பலாய்சலந்தையுண்டு சோபமாய்கரையிலேறி
தம்பிமார்மடிந்திட்டீரோ தர்மருக்கென்னசொல்வேன்

அருச்சுனனசொல்-தரு-ஜம்பை.

ஐயையோதம்பியரே அரசர்செய்தசதியாலே
வையகத்தைவிட்டுயிந்த வனந்தனிலேவந்தோம்
வந்தோரிடந்தனிலே மாயமான்பின்றொடர்ந்து
அந்தமாம்வெய்யலிலே அலைந்துமிகநொந்தோம்
கானகமெல்லாமோடி களைத்துமிகவேஅலைந்து
ஆனதோர்சலம்வேண்டி அனுப்பினாரண்ணா
தாகமதுதீர்வதற்கு சலங்கொண்டுவாரோமென்று
வேகமாயோடிவந்துவேர்த்துவேர்த்துகளைத்தீரோ
நீதியோஇக்கரையில் நித்திரையோபோசீர்கள்
ஆதரவாயெந்தனுக்கு அறியவுரைப்பீரோ
அழகுமூர்க்கன் ஆண்மைகளும் அதிகபிலவார்த்தைகளும்
பழுதாகப்போச்சுதென்று பதறிவிழுந்தழுதான்

அருச்சுனன்-தண்ணீர்குடித்து-மூர்ச்சையாகிய-விருத்தம்

இப்படிதுயரமாகி யியலுள்ளவிஜயன்தானும்
தப்பில்லாதம்பிமாரே தரணியிற்தரித்துப்பின்னும்
செப்பியேசுச்சுப்பொய்கை தீர்த்தமும்அருந்திவேரோர்
ஒப்பில்லாவிஜயன்தானும் உகந்துட்டு மூர்ச்சையானான்

தருமர்வீமனுக்குச்சொல்-விருத்தம்

ஐயையோதம்பிவீமா அரியனற்றுணைவராததும்
வெய்யவேகானிலிலெ மெலிந்துயிரிறந்திட்டாரோ
செய்யமாமிருகமினறுதின்றுதென்றறியேன்யானும்
உய்யவேஅரைநாழிக்குள் துரியனைத்தேடிவாராய்

வசனம்.

வாருந்தம்பி வீமசேனராஜனே தம்பிமார் மூன்றுபேரையும் சலத்து க்குஅனுப்பினேன அவர்கள் யின்னம் வரக்காணேம் மறமிருகங்கள் பி சித்துதோ தெரியவில்லை நீசீக்கிரமாய் தம்பிமாரையுங்கூட்டிக்கொண்டுஜ லங்கொண்டுவாரும் தம்பிவீமசேனா.

வீமன்சொல்-விருத்தம்.

மலையினையொத்ததோளான் வாசவின்மைந்தன்வீடேன்
கலைதெறிசர்பாதம்கண்டுமேமூர்ச்சையாகி
நிலையினியரிதிடாமல் நீடியகானகோரும்
பலபலவிசாரத்தோடே பாரினில் நடக்கின்றுனே

வீமன்சொல்-தரு-இம-நீலாம்புரி.

கங்கைமதிபணிந்தகர்த்தனே நானென்னசெய்வே சிவனே
கானிலரியசதுனைகாணேனே நானென்னசெய்வேன் சிவனே
எங்குமதிரிந்துமமிருகனைனறு நானென்னசெய்வேன் சிவனே
என்தம்பியிலையலாமூவரிருக்குமிடமேதோ அறியேனே சிவனே
அன்னியகானில்துணைவனைக்காணேனே நானென்னசெய்வே சிவனே
தருமர்சொகந்திர்த்தமூவரைக்காணேனே நானென்னசெய்வேன் சிவனே
வில்லுக்குரியவிசையனைக்காணேனே நானென்னசெய்வேன் சிவனே
வேகமாய்கானகம்போவுமிடமேதோ அறியேனே சிவனே
வெம்பிபதாகத்தால்மணிமேனியுந்தோனென்னசெய்வேன் சிவனே
தாகவேட்கையாலேதருமர்விடாய்ப்பட்டுயிருப்பாரேயென்னசெய்வேன் சிவனே
கம்பும்படியார்க்கருள்செய்யும்அர்பிகைபாகா சிவனே
நான்முகன்மாலுமரியாசோதியேனானென்னசெய்வேன் சிவனே

வீமன்சொல்-விருத்தம்

நின்றுதான்துயரமாகி நெடுந்தூரம்பார்க்கும்போது
கண்டுதாநச்சுப்பொய்கைதனியேவந்துநின்று

மூன்றுபேர்தம்பிமார்கள் மூர்ச்சையாய்கிடக்கக்கண்டு
தான்வீமசேனனப்போ கதறியேபுலம்பலுற்றான்

வீமன்சொல் தரு

தயங்கியேமாண்டீரோ தண்ணீரில்லாமலே — தம்பிமாரே
மயங்கிவிழுந்துநீங்கள் மரணமடைந்தீரோ — தம்பிமாரே
எங்களைவிட்டுநீங்கள் எங்கேயொளித்தீரோ — தம்பிமாரே
உங்களைவிட்டுநான் வெகுக்ஷணமிருப்பேனோ — தம்பிமாரே
அழுதுபுலம்பிடலையுதேயென் னெஞ்சம — தம்பிமாரே
எழுந்திருந்துநீங்களென்னுடன்பேசீரோ — தம்பிமாரே

வீமன்புலம்புகிற - விருத்தம்

திக்கெனவசுரர்யாருந் திகைத்திட விசையங்கொண்டு
அக்கணம்வருவாய்யுந்தன் ஆண்மையேதென்றுசொல்வார்
தக்கருந்துணைவரோடு தாரணியிற்றறியேன்யானும்
டக்குவமேதோயான்செய் பாவமேஅறிகிலேனே

வீமன்-தர்மனைநினைத்து-புலம்புகிற-தரு

சலமதுகிடையாமலே அண்ணாவேஎன்னிட — அண்ணாவே-நான்தான்
திகைத்துபுலம்புகிறேனே — அண்ணாவே
பிலனதுவிழுந்துநீரும் அண்ணாவேஎன்னிட — அண்ணாவே-நீர்தான்
பேயனைப்போல்கிறங்கீராதான் — அண்ணாவே
உம்முடையதாகத்தாலே அண்ணாவேஎன்னிட — அண்ணாவே-நீர்தான்
ஓடிவந்தீரானல் — அண்ணாவே
பிர்மாவின்எழுத்தினால் அண்ணாவேஎன்னிட — அண்ணாவே-நாங்கள்
பிலனிழந்துமாண்டோமிப்போ — அண்ணாவே
எங்களைக்கண்டுநீதான் அண்ணாவேஎன்னிட — அண்ணாவே-நீர்
ஏங்கித்தவித்திடாமல் — அண்ணாவே
தங்களிட ஆசிரமத்தில் அண்ணாவேஎன்னிட — அண்ணாவே-நீர்
சதிருடன்போவீரென்று — அண்ணாவே
நிலந்தனில்மணல்பரப்பி அண்ணாவேஎன்னிட — அண்ணாவே-நான்
நிருபமெழுதிவைத்தேனே — அண்ணாவே
தாகமானல்எந்தனுக்கு அண்ணாவேஎன்னிட — அண்ணாவே-இப்போ
தரிக்கவசமில்லையே — அண்ணாவே

குணமுடன்சலத்தைபள்ளி அண்ணுவேஎன்னிட அண்ணுவே-நான்
குடித்துமாளுவேனே அண்ணுவே தான்

வீமன்-தண்ணீர்குடித்துமூர்ச்சையாகிய-விருத்தம்

நீரினையருந்தவீமன் நினைவில்லாமயக்கத்தாலே
பாரியதடாகமேடில் பருவிரலதனு லூணி
வீரியமடக்கிப்பின்னும் வேறொன்றுமதோணுமல்தான்
நேரதாய்விழுந்துமன்னன நினைவில்லாமூர்ச்சையானுன்

பொது-விருத்தம்

அள்ளியேபொசித்துகஞ்சா அனைவரும்மாண்டோமென்று
தள்ளிதான்விடுவாரொன்று தருமருக்கெழுதிவைத்து
வெள்ளியங்கிரியைப்போலே வீமனும்விழுந்துமாண்டான்
கொள்ளிபோல்தாகத்தாலே கொற்றவரொழுந்துவாரார்

வசனம்.

அகோதெப்படியென்றால் அந்தச்சமையத்திலேவீமசேனன் மூர்ச்சையாய் விழுந்தபிறகு தாமராசாவுக்குதாகம் பொறுக்கக்கூடாமல் தம்பிமாரைத்தேடி புலம்புகிறவிதங்காண்க

தருமர்-தம்பிமாரைத்தேடிவருகிற-தேவாரம்

சங்கரா அபயமையா சதாசிவசாம்பமூர்த்தி
பொங்கரவணிந்தமார்பா புனிதனேபுராந்தகாவி
வெந்தணலெரியுங்காட்டில் விடாயத்துநான்மயங்கின்றேனே
செங்கையில்மழுமானேந்தும் சிவசிவா அபயமையா

தருமர்-புலம்பல்-தரு

தகனமானகாட்டில்தண்ணீரில்லாமலே தம்பிமாரே-ஐயோ
சகுனம்தப்பிநீங்கள் சாய்ந்துமடிந்தீரோ தம்பிமாரே-ஐயோ
பொன்னுலகந்தன்னில்போச்சதோவும்முயிர் தம்பிமாரே-ஐயோ
என்னைவிட்டுநீங்களெங்கேமடிந்தீரோ தம்பிமாரே-ஐயோ
வனதிலெலந்தனைவிட்டுமாயமாயப்போனீரோ தம்பிமாரே-ஐயோ
சுனையில்முதலாயிபபோதுடுக்காமுழுங்கிச்சோ தம்பிமாரே-ஐயோ
தாகசோபமெனனை தணலாயெரிக்குதே தம்பிமாரே-ஐயோ
சந்தனமாத்தண்டேசயனித்துக்கொள்ளுவேன் தம்பிமாரே-ஐயோ

19

சபையார்சொல்-விருத்தம்

மீண்டுமாமுனிவனத்தில் மெல்லியாள் துரோபதையும்
கண்டமானைபிடிக்கப்போன காதலராத்திருக்க
கொண்டிடுமெசோபத்தாலே காதையூர்ந்தின்றுகொண்டு
கண்டதோர்கனவினாலே காரிகைபுலம்பலுற்றாள்

வசனம

அகோதெப்படியென்றால் தருமராசன் சப்பிமானைத்தேடிக்கொண்டு போகச்சே அதிகசோபமாய சந்தனமரத்தின்கீழ மூர்ச்சையடைந்தார அங்கே பன்னகசாலையிலே நித்திரைசெய்கிற துரோபதைப்பயனை கனவுகண்டு பிரலாபிக்கிறவிதங்காண்க.

துரோபதை-கனவுகண்ட-தரு

கானகத்தில்போன	மன்னர்
களைத்துமெத்தசோபமாகக்கண்டனன்	கனவுகண்டனன்
மானுருவம்	ரோணரும்
மாரீசமாய்வந்ததாகக்கண்டனன்	கனவுகண்டனன்
கானத்திலேதடாகம்	ஒன்று
வளமுடன்மாமூனுகுழக்கண்டனன்	கனவுகண்டனன்
களைத்தவிடாயாலே	தண்ணீர்
காகச்சகாதேவர்போகக்கண்டனன்	கனவுகண்டனன்
குளத்திலேசலம்	குடித்து
குப்பென்றுமூர்ச்சித்துவிழக்கண்டனன்	கனவுகண்டனன்
அழைத்துவரவே	நகுல
ராசனும்போயருந்திவிழக்கண்டனன்	கனவுகண்டனன்
சிலைக்குரியவிசய	ராசன்
சென்றுதேடிப்போயவிழவுங்கண்டனன்	கனவுகண்டனன்
மலைக்குநிகரான	வீமர்
வனத்தில்நீருந்திவிழக்கண்டனன்	கனவுகண்டனன்
சந்தனமரத்	தடியிலே
தருமருங்களைத்துவிழக்கண்டனன்	கனவுகண்டனன்
விந்தையோ இதென்ன	பாவம்
சந்தேகமாயிப்பொழுதுகண்டனள்	கனவுகண்டனள்
விதிவசமோசதி	யோசமோ
ஏதுவும்நானறியேனேயோகண்டனள்	கனவுகண்டனள்

மகிமணிப்பீசன் வாறோ
மாயவனார்தன்செப்பலோகண்டது கினவுகண்டது
போடியாய்துரிப ளுலே
காட்டில்வந்தமாரீசமோகாரணமே வரக்காணபே
வல்லவரைப்பிரா ணேசநுககு
வனகமோசயவந்துதோகாரணமே வரக்காணபே
அல்லமாடக்கட்டில் வந்து
சொல்லேபில்சிகிக்ருமோபாரணமே வரக்காணபே

துரோப்தைசொல் விருத்தம்-இ-ர-கெண்டா

அரிகரிமுகுந்தாசங்கா ஆதியேவேதமூர்த்தி
திரிபுரதககனுவுந்தன செபலேசொபுரியேயனையா
வரிசிலைகுனித்துக்கொண்டு மனினைத்துடர்ந்துபோன
அரசரினைவரவுகாணேனை அடியாளுமெனனைசெயவேன்

துரோபதைசொல்-தரு-இ-ட-காம்போதி

மரன்பின்தொடர்ந்துபோன மன்னர்வரவுங்காணேன்
பர்மமேதாவதியேன் தெய்வமே
சேன்புகழ்கீர்த்திபெற்ற ஆனந்தான்னவர்க்கு
திருகாமயன்னுமாக்குந்தா தெய்வமே
காருசகுணதாலே கலங்கி மயங்கினேறேன்
காரணமொன்னுமோதான் தெய்வமே
காருவிதத்தாலுமமானவிருதுவெவிந்துநின்றேன்
நாராயணாவெயன்னைசெயவேன் தெய்வமே
தர்ம்மகுணமிகுந்த மர்மமில்லாமதர்ம்ம
தபாளாவவுகொண்ணன் தெய்யமே
காசிதில்கைகத்வெயடுகதம்கனமபெற்றவீமசேனர்
காணேமேவெயனனைசெயவேன தெயுவமே
வில்லுககுரிசயான்வீமனர்ச்சுனராஜராசன்
விசயனவரவுககாணேன தெயவமே
நல்லாணரி நரிசொல்லும்நல்லகுலகுலராசனை
கணைணிவிற்காண்பதெப்போ தெய்வமே
கல்வியில்மிகுத்தபல்லசகாதேவராசனைக்
காண்பதெவ்வாறுசொல்வாய் தெய்வமே

அல்லும்பகலுமெந்தன் கள்ளமகத்திலைக்கும்
    இலவாக்காண்பதெப்போ — தெய்வமே
மாயமானின்செயலோ மர்மம்நீர்செய்யவேண்டாம்
    மனதுவைத்தருளுவீர் — தெய்வமே
காயாம்புமேனியன்ன சுரும்கருணைசெய்து
    கடைக்கண்பார்த்தருளுவீர் — தெய்வமே

துரோபதைசொல்-செர்சகம்

ஆதரவாரில்லாவேந்தன் அவையுற்றள றுவிதாலும்
ஏதுகாரணமே யீசன் இவ்விதபசெயத காலம்
காதன்துரியனசெய்த கபடேதோமாயனும்ச
மாதுயென்முன்னிற்க மன்னனாவாச்செய்வாயே

சபையார்சொல்-பொதுவிருத்தம்

சந்தனமரத்தின்கீழ சயனமாய்தர்மராயர்
வெந்துதான்கங்கையாலே மெலிந்துயிருந்தபின்பு
மூர்துவேதிரியன்தானும் விளம்பியமுனிவனைப்போர்
அந்தமாய்ஓமம்செய்ய அக்கினிவளர்த்திருனே

காளமாமுனிசொல்-தேவாரம்.

ஆலகாலவிஷத்தை அள்ளியுண்டவனேபோற்றி
நீலகண்டவனேபோற்றி நிர்மலசுருபாபோற்றி
காலகாலவனேபோற்றி கார்மதன்கட்டனேபோற்றி
மாலயனமரர்போற்றும் மங்கைபங்களாபோற்றி

115746

காளமாமுனிசொல்-தரு-இ-ம-ஜம்பை

பாவிஅந்ததுரியன்செய்தபகைதனையறியாமல்
    வேள்விசெய்யமீண்டுவந்தேன்விமலாஎன்முன் — வருவாய்
கொடியபாவிதுரியன்செய்தகொடுமையினாலெனக்குயிப்போ
    மடியவந்துதென்னசெய்வேன்மகேசாயென்முன் — வருவாய்
அரியதவஞ்செய்தும்வினையகலுமென்றுயானிருந்தன்
    உரியவந்ததுரியனாலே ஊழ்வினையான்றி — யேன்
ஆதிகுருஆனேஉன்னை பணிதினமும்யான்மறவேன்
    சோதனையால்பூதம்ஒன்றுந்தோன்றஅருள்

விருத்தம்

அக்கினியிலெழுந்தபூதம் ஆக்கிரமித்தெழுந்துசீறி
துங்காரங்காரர்களாகி துலங்கிடப்போற்றியெழும்ப
சங்கையில்லாமலிப்போ தவமுனியானும்வென்னை
இங்குமேஅழைத்ததேதோ இயம்புமென்றெழுந்துதங்கே

பூதம்-வருகிற-தரு-இம்

இந்திரநீலப்பர்வதங்காணெழுந்தடைந்துவருவதுபோல்
சந்திநீலப்பூதராட்சதன் ஓடிவந்தானே
முகிலெழுந்தபடலைப்போலும் முடியரோமம்படியமுதல்
ஓங்கியெழுந்தபூதராட்சதன் ஓடிவந்தானே
பல்லுகள்மூன்றாம்பிறையைப்போலும்பார்த்தால்பார்வைமிகநடுங்கிட
கொல்லுவர்காளையிடிகள்போலே கொக்கரித்தானே
தழைக்கவேவேதமுனிக்கதனைவளர்த்தியெந்தனையிப்போ
அழைத்தகாரியமென்ன க்ஷணத்திலறியக்கூறாய்

பூதம்சொல்-விருத்தம்

முனிவனேபோற்றிபோற்றி முத்தியானுறவாபோற்றி
இனியவேதத்தினமார்க்கமிசைத்திடவல்லாபோற்றி
புனிதனேயென்னையிப்போ போதவேஅழைத்ததேது
கனிவுடன்சொல்லுமென்றுகழலிணைப்பணிந்ததங்கே

வசனம்.

சரணம்சரணம்முனிநாதா என்னைஅழைப்பித்தகாரியம் அருளிச்செய்யுமையா முனிநாதா

காளமாமுனி-பூதத்துக்குச்சொல்-விருத்தம்

பாதமேசரணமென்று பத்தியாய்ப்பணிந்துநின்ற
பூதமேகேளாயிந்தபுவிமலைவனங்கள்தேடி
பேதமாஐவர்தம்மைப் பிடித்துநீமெலியக்கொன்று
சேதமேபடுத்தியிப்போ க்ஷணத்தினில்வருகுவாயே

வசனம்,

கேளும்பூதமேஇந்தவனத்தில் பஞ்சபாண்டவர்இருக்கிறார்கள் அவர்களை உனக்கு பலிகொடுத்தேன்நீபோய் அவர்களைப்பிடித்துத் தின்று போட்டுவாரும்பிள்ளாய், பூதமே,

பூதம்சொல்-விருத்தம்.

நாட்டமாஐவர்தன்னை நான்பொலிகொள்ளச்சொன்னாய்
திட்டமாயவனத்துக்குள்ளே திசையெலாந்தேடிப்பார்ப்பேன்
கூட்டமாயிருந்தலாசகூறிதமாண்டாரானல்
ஓட்டமாயோடிவந்து வுன்னைநானபெலிகொள்வேனே

வசனம்.

கேளும் முனிநாதாதேவரீர்சொன்னபடிக்கு பாண்டவாள்உயிருடனேயிருந்தாலாச்சு இல்லலா விட்டால் திரும்பி வந்து உம்மைத்தானே பொலிகொள்வேன் இதற்குசம்மதியானல் போய்வாரேனையாசுவாமிமுனிநாதா,

முனிசொல்-வசனம்

அப்படியேசம்மதிதான் போய்வாருமபூதமே.

பூதம்சொல்-தரு-இ-ம்

எங்கே ஓடுவேன்ஐவரை-எங்கேதேடுவேன்
அங்கேஓடித்தேடியேழுலகும்மலையுங்குகைப்பும்
கங்கைநதியும்முழுகித்தழுகிகடுகிபொலிகள்முடுகிக்கொள்ள-எங்கே
காடுமலைகளநாடுவனங்கள் கதறிபதறிதேடினாலும்
ஓடுமவரை துரத்திப்பிடித்து வுருக்கிப்பெலிகள் முறுக்கிக்கொள்வே
வேதமுனிவன்வாக்கியப்படி மேவுவனத்தில்ஐவர்தங்களை
சாதமுடன்கொன்றுயென்பசிதணியச்செய்து அனாகொடிதன்னில்
வுருக்கிஐவரைத்துரத்திப்பிடித்து
பசிக்குளடக்கஅரைகொடிக்குள்ளே எங்கே

பூதம்சொல்-விருத்தம்

எங்கையுந்தேடிப்பார்த்து யிபலுடன்காணுத்தலே
கங்கையும்நதியுங்காடும் கடுகியேநடந்துபார்த்து
சந்தனமாத்தின்கீழே தர்மபூபதியைக்கண்டு
செந்தணலுதித்தபூதம்சீறியேப்புலம்புதங்கே

பூதம்-தர்மரைப்பார்த்து-புலம்புகிற-தரு

மாண்டுபோய்கிடக்கிறரேவையகமாளும்தர்மராயர்
ஆண்டிருந்தபூமிவிட்டு ஆரணியந்தன்னில்வந்து
ஒருவரை தனியேவிட்டு ஓடினார்நாலுபேரும்
திருவுடையதர்மராயர் சென்றிறந்துபோனாரையோ

சு

பூதம்-கோபமாய்சொல்லுகிற-விருத்தம்.

செய்யதோர்பூதந்தானுபசியியேகோபமாகி
வையவேநால்வர்தானும்பாரினிலொளித்தாரென்று
கெய்யவேபூதந்தானும்கொடிக்குள்ளேகண்சிவந்து
உய்யவேஅரைநொடிக்குள் ஓடியேவந்ததங்கே

பூதம்-நால்வரைப்பார்த்து-புலம்புகிற-தரு

குன்றுபோல்மடிந்தானேயோகோடையிடிவீமசேனன
அன்றுபோர்செய்தவிஜயன் அனைவரும்மடிந்தாரையோ
கொன்னைபிணத்தின்பேரில் கொடுமைக்காயெனைவிடுத்தான்
மன்னவினமேலாமஞ்செய்துவரவழைத்தான காளமுனி
பிணத்தின்மேலேயனுப்பபிறப்பித்தானேபிரம்மதேவன்
என்னமோசஞ்செய்தானேயோ யினியிழைக்காமகாளமுனி
அவன்தனையேகொன்றுநின்று ஆறுவேன்யெந்தன்பசி

பூதம்-காளமுனியை-புசிக்கிற-தரு-இ-ம்

உற்றுப்பார்த்து உயரக்குதித்ததே   காளமுனியை
ஓடிவந்து   தூரிப்பாயுதே
சீறியெழுந்துசிதறிப்பாயுதே   காளமாமுனியை
சிறந்தசூலம   பூண்டிடிக்குதே
மதத்தினலந்தபூதந்தானும்   காளமாமுனியை
மண்டிபிட்டு   தூரிப்பாயுதே
பிரிக்கூடலைப்பிடுங்கித்தின்னுதே   பூதந்தானும்
பிறந்ததிபினில்   விழுந்துமாண்டதே

பொது விருத்தம்

கரிசெனவெழுந்தபூதம் காளமாமுனியைக்கொன்று
மருவியசொப்பில்விழ்ந்துமேபோனபின்பு
திரிபுரைதர்மராயர் சென்றுமீண்டபின்பு
குருகுலந்தழைக்கவென்று கொற்றவரெழுந்துவாரார்

தர்மர்சொல்-தேவாரம்

ஓம்நீலகண்டாபோற்றி உமையிடபாகாபோர்றி
ஓம்பேயோடாடிபோற்றி ஓநசனிமுகவேலபோற்றி
ஓம்எங்கள்தம்பிரானை ஓருநாளும்பிரிந்ததில்லை
ஓம்சதாசிவனேபோற்றி ஓன்னைக்காண்பதெப்போ

22

தருமர்சொல்-தரு-இ-ம்

இறந்துஎங்கேபோனீர்களோ எந்தனுக்கினியகோவே
மறந்துஎங்கேபோனீர்களோ மானிலத்திலென்னசெய்வேன்
சிறந்தஉயிர்வருந்தெழுந்தஎன் செல்வமணிவிளக்கே
என்னைத்தனியவிட்டு எங்கொளித்தீர்தம்பிமாரே
கனிவுடையகுந்தியம்மாள் கண்மணிபாலன்தன்னையிந்தில்
இனிபிறக்கப்போறாரோதான் எந்தனுக்கினியகோவே
என்னசெய்வேன் ஏதுசெய்வேன்
எனக்கினிய தம்பிமாரே

தர்மர்சொல்-தேவாரம்

ஆதியேஉந்தன்பாதம் அருமையாய்ப்போற்றுகின்றேன்
சோதியாய்வந்துஎந்தன் துயரத்தைத்தீருமையா
வேதனைவாகவேதான் மெலிந்துயிர்வாடுதிப்போ
நீதியோஉந்தனுக்கு நிமலனேஅபயமையா

தருமர்சொல்-தரு-இ-ம்,

தம்பிமார்போனதடத்தையுங்காணேனே சங்கரா-சங்கரா
வெம்பியதாகத்தால்விடாய்பட்டிருந்தேனே சங்கரா-சங்கரா
செல்வதுரைகள்போன சீர்வழியுங்காணேன் சங்கரா-சங்கரா
அல்லல்படுவதிப்போ அரசன்செவிகேழ்க்குமோ சங்கரா-சங்கரா
நாலுபேரும்போனநல்வழியுங்காணேன் சங்கரா-சங்கரா
காலுங்கடுக்குதுகண்பூத்துப்போகுது சங்கரா-சங்கரா
ஆலமுண்டவர்போலே அலையுதேயென்னெஞ்சம் சங்கரா-சங்கரா
கோலமானமிருகங்கொன்றுதானபோச்சுதோ சங்கரா சங்கரா
அஞ்சுபேர்களொன்று அவனியிலிருந்தோமே சங்கரா-சங்கரா
பஞ்சைகள்போலென்னைப்பறக்கவிட்டீர்களோ சங்கரா-சங்கரா
காட்டானைசிங்கங்கரடிதான் தின்றதோ சங்கரா-சங்கரா
சேஷ்டைபுலிகாடிதின்றுதான்போட்டதோ சங்கரா-சங்கரா

தருமர்சொல்-விருத்தம்

அழுததானெழுந்துதர்மர் அடவியில்நடக்கும்போது
பழுதில்லாதம்பிமாரை பாங்குடனகண்ணில்கண்டு
மயங்கியேபெழிந்திருந்து மன்னரைத்தழுவிக்கொண்டு
எழுதியவெழுந்தோவென்று யேங்கியேபுலம்பலுற்றார்

தருமாசொல்-தரு-இ-ம்

பொலிவுற்ற பசியுற்ற
மணிசித்திர முடிபெற்றதம்பிமாரே-இந்த
புனலுற்ற திருவைக்குள்
மணிமெத்தை தனிலுதித்த-தம்பிமாரே
குந்திராஜனதந்தகுந்தியம்மாள்பெற்ற தம்பிமாரே-என்
கூடப்பிறந்தீர்கள் வாடத்தகுமோஎன்-தம்பிமாரே
எழுசாடிசஞ்சுனை டிராட்சதனைக்கொன்றாய் பீமசேனா-நகுலனை
இடந்திர்பாய்பின்தனனுடலறுத்தாயே நீபீமசேனா
நூற்றுவனைமண்ணில் நூறுவக அடிப்பேனென்றாய்-பீமசேனா
கொந்தும்ண்மேனை யில்வந்துபடுத்தாயோ பீமசேனா-இப்
பாமனபக்கலசென்றுபாசுபதம்பெற்றாய் அர்ச்சுனா-கர்னன்
பகையைச்சாதிப்பேனென்றசபதம்மறந்தாயே-அர்ச்சுனா
குதினாதுனைமக்களைகொல்வேனென்றுயேநகுலராசா-அந்த
கோதைதுரோபதைகுரல்விட்டழுவாளே நகுலராசா
சாஸ்திரவேதாநீ சூஸ்திர அலதாரி-சகாதேவா-அந்த
சகுனியைகொல்வேனெனறசபதங்கள் மறந்தாயோ-சகாதேவா
அபயமென்றுவந்தவேதியர்க்குநீங்கள் தம்பிமாரே-இப்போ
அபயஸ்தங்கொடுத்துநீயலையவுமாச்சுதோதம்பிமாரே

)✳(

தர்ம்மர்சொல் - தேவாரம்.

அரியயனமரர்போற்றும் அரவணிந்தவனேபோற்றி
கரியுரித்தவனேபோற்றி கபாலருத்திரனேபோற்றி
திரிபுரமெரித்தாயபோற்றி திங்கள்சூடியானேபோற்றி
பரிவுடனென்னசெய்வேன பார்வதிபங்காபோற்றி

தருமர்சொல்-தரு-இ-ம்

என்னசெயவேன் தம்பிமாரே-எழுந்திருந்துபேசீர்களோ
அண்ணன்தன்சொற்படிக்கு-அனைவரும்மடிந்தீரோயிப்போ
பண்ணவர்களுக்காயிப்போ-வனவாசமவந்திடத்தில்
மரணமாகக்காலமாச்சோ-மாயவனார்தன்செயலோ
கர்னன சகுனிகூட-காவலர்கள்சொற்படிக்கு
துரியனுடசொற்படிக்கு-தோருமல்தோர்ந்துவிட்டேயோ
அன்னக்கொடிபடைத்தஆதியோநானென்னசெய்வேன்

சொர்ன்னக்கொடிபடைத்த-சோதியேநானென்னசெய்வேன்
நீலக்கொடிபடைத்த-நிமலனேநானென்னசெய்வேன்
கொடிக்கொடிபடைத்த-கேசவாநானென்னசெய்வேன்
சோதியேசொரூபமேநீ-சுடரொளியேகாருமையா

தருமர்சொல்-தேவாரம்

ஏதுநான்செய்வேனையா இயலுள்ளதம்பிமார்கள்
காதுகண்மூடிபோகக் கருதரிவழிகாணேயோ
சோதியாயநின்றமூர்த்தி துணைவனாயிருக்கதனையா
நீதியோவுந்தனுக்கு நீதனே அபயமையா

தருமர்சொல்-தரு-இ-ம்.

கர்த்தனுரோஅபயமையா இந்தக்
காட்சிகாணவனத்திலாட்டிடீரோ
நித்தனுரோஅபயமையர் உமக்கு
நீதிதானோதனித்துநிற்கயானும்
மானினதைக்கண்டுபின்தொடர்ந்து இப்போ
மடியவேதான்நாம்காட்டில்வந்தோம்
துணையிழந்தேன்தம்பி மார்களையும்
துரைகள்நால்வரையும் கண்ணில்காணேனேயோ
என்னசெய்வேன்தம்பி மார்களே
எழுந்திருந்துஎன்னுடன்பேசீர்களோ
அன்னேமுன்னேசெய்ததென்னகுறை இந்த
அடவிதனிலலையக்காரணமோ

தருமர்சொல்-விருத்தம்

கர்த்தனே அபயமையா கைலாசநாதாபோற்றி
நித்தனேநிமலாபோற்றி நிலையதுஅழிந்தேயானும
சத்தியந்தவராமல்தான் தனிலையலைந்தயானும
வெற்றியாம்தம்பிமாரை விருடனிழந்தேனையா

தருமர்சொல்-தரு

என்னுடையதம்பிமாரை எப்படிமறந்திருப்பேன
பிரிந்திருக்கானதியேன் பேதலைதமயேமோ
கனிவுடையகுந்தியம்மாள் கண்மணியாள்தனைய்றல்
இனிபிறக்கப்போரூமோதான் என்னுடையதம்பிமாரே

காடிவனத்திலிப்போ நலமுடனேஐவர்களும்
கூடிவிளையாடுகாமே குருகுலத்துச்செல்வந்தரே
சீருலவுந்தம்பிமாரே யெனசெல்லபணிவிளக்கே
ஆருமப்பொய்கைதனிலே அடவிதனில்வந்திடத்தே
காட்டிவிருந்தாமானால் நல்பிணமாய்செய்திடுவார்
காட்டிவிறந்தவுடன் கழுவிழுங்காரணமோ

தருமர்சொல் - விருத்தம்

அழுதுகாலெழுந்துதருமர் அக்கிலந்தன்னில்வீமன்
எழுதியகுறிப்புகண்டு யெரிகின்றதாகத்தாலே
எழுந்துதானபடிவோமென்று இயலுள்ள தருமராயர்
பழுதில்லாமாயனுரை பாங்குடனினைத்துச்சொல்வார்

தருமர்சொல் - தரு இம்

ஐயையோ இராமர்செய்யும்
செயலேதானறியேனே
பையரவக்கொடியோனால்
வையகந்தனையாள மாண்டீரோதம்பி—ஐயை
வருந்ததமுடனேபெற்ற மாதவத்தாயாருக்கு
தரிக்குதோ அவளுயிர் தனலில்விழுவாளே—ஐயை
துரோபதைசூதகத்தில் சொன்னபடி முடிக்கவும்
வாராமல்பூமியில் மாண்டீரோதம்பி—ஐயை
சின்னஞ்சிறுவயதில் சீருடனேபெற்ற
அன்னைவயதினில் அனைமூட்டினீரோ—ஐயை
நீர்சொன்னவசனமெல்லாம் தருமமல்முடிக்கவும்
வாராமல்பூமியில் மாண்டீரோதம்பி—ஐயை

தருமர்சொல் - விருத்தம்

அரியமால்போனேனையோ அழகுள்ளநான் தான்செய்த
பிரிந்தைக்கண்டேனால் பிணதொடர்ந்தேகுவேன்யான்
அறிவதுகேட்டுநானும் அம்பலமானேனையோ
குறிப்புடனேதிதந்தனை குடித்துநான்மாளுவேனே

பொது-வசனம்

இந்தப்பிரகாரம் தருமராசன்புலம்பிக்கொண்டு சலத்தைச்சாப்பிட்

வேண்டுமென்று போகிறபோது எமதருமராஜன் ஆசீர்வாக்கியம் சொல்லுகிறவிதமெப்படியென்றால்.

எமதர்மராஜன்செல்-விருத்தம்.

தண்ணீர்தனைப்பொசிக்கிடாதே தரணியையாண்டமன்னா
குணநீயேகலக்கும்நெஞ்சு குடித்தவர்பிழையாரப்பா
எண்ணியேபார்த்திடாமல் யிறந்தனர்நாலுபேரில
கனநீயேகேட்டீரானால் நல்லதுபெறுவீரையா

வசனம்.

அகோவாரும் தர்மராசனே சலத்தைச்சாப்பிட வேண்டாமென்று சொல்லவும்கேளாமல் சாப்பிடப்போறாய ஆனால் நான்கேட்கிறவசனத்துக்குபதில்வசனம்சொல்லிவிட்டு சலத்தைச்சாப்பிடுமென்றாய தர்மராஜனே

மராமரம்சொல்-தரு

சொல்லுநூலிற்பெரியதேதடா தர்மராயா
சொல்லிவனத்திலேகுவாயடா தர்மராயா

தர்மர்சொல்-தரு.

சொல்லுநூலிற்பொருளுமெய்யப்பா மராமரமே
துணையதிலுறுவதெச்செய்தேனையா மராமரமே

மராமரம்சொல்-தரு.

இல்லறந்தனிலழகுயேதடா தர்மராயா
இவையறிந்துநீபுனைசெய்வாயடா தர்மராயா

தர்மர்சொல்-தரு

இல்லறந்தன்னிலழகுபெண்ணையா மராமரமே
ஏக்கித்தியவகிவாடுதேனையா மராமரமே

மராமரம்சொல் தரு.

வனத்திற்பூவிற்பெரியதேதடா தர்மராயா
வகையறிந்துநீபுனைசெய்வாயடா தர்மராயா

தர்மர்சொல்-தரு

பூவிற்பெரிதுபாரிசாதக்காண் மராமரமே
புலம்பிப்புலம்பிவாடுதேனையா மராமரமே

மாரமரம்சொல்-தரு

தவத்திலுர்கான்பெரிதேதடா — தர்மராயர்
தானறிந்துநீயுரைசெயவாயடா — தர்மராயர

தருமர்சொல்-தரு.

தவத்திற்பெரிது தலத்துறைஞ்சைதான் — மராமரமே
தானறிந்துநானுரைசெய்தேனையா — மராமரமே

மராமரம்சொல்-தரு.

முனிவர்பணியுந்தெய்வமாரடா — தர்மராயர்
முறையறிந்துநீஉரைசெய்வாயடா — தர்மராயர

தர்மர்சொல்-தரு

முனிவர்பணியுந்தெயவமாதவம் — மராமரமே
முறையறிந்துநானுரைசெய்தேனையா — மராமரமே

மராமரம்சொல்-தரு

பெண்டுகள்தனக்கழகுயேதடா — தர்மராயர்
பெருமையுடனேயுரைசெயவாயடா — தர்மராயர

தருமர்சொல்-தரு

பெண்கள்தனக்குஅழகுநாதன்நான் — மராமரமே
பெருமையுடனேவுரைசெய்தேனையா — மராமரமே

மராமரமசொல்-தரு

துணிந்துமடிந்தமன்னவர்க்கேதடா — தர்மராயர
துரிதாயெனக்குரைசெய்வாயடா — தர்மராயர

தருமர்சொல்-தரு.

துணிந்துமடிந்தால்வீரசொக்கந்தான் — மராமரமே
துரையறிந்துநானுரைசெய்தேனையா — மராமரமே

மராமரம்சொல்-தரு

செவிகடனக்கின்பமேதடா — தர்மராயர
செயலறிந்துநீயுரைசெய்வாயடா — தர்மராயர

தருமர்சொல்-தரு

செவிகட்கின்பம்மதனச்சொல்லையா — மராமரமே
சீரறிந்துநானுரைசெய்தேனையா — மராமரமே

மாரமம்சொல்-தரு

நிலையதாகநிற்பதேதடா — தர்மராயா
நீதியெனக்குவுரைசெய்வாயடா — தர்மராயா

தர்மர்சொல்-தரு

நீதிபெருங்கீர்த்திமன்னர்தான் — மாமரமே
நிலையநிற்றுகாணுரைசெய்தேனையா — மாமரமே

மாமரம்சொல்-தரு

இன்னவசனமாவதேதடா — தர்மராயா
சேதிந்துநீயுரைசெய்வாயடா — தர்மராயா

தர்மர்சொல்-தரு

இன்னவசனம்பிட்சையெடுப்பது — மாமரமே
தேக்கித்தியங்கிவாடுறேனையா — மாமரமே

மாமரம்சொல்-விருத்தம்

என்னிடசொல்லுக்கெல்லாம் இசைந்தவாய்மெச்சினேன்யான்
மன்னுடனேரியனுன்ளே மடிந்ததோர்தம்பிமாரில்
உன்னிடமனதுக்கேற்ற வுகந்தவொருவனதன்னை
பின்னுமேயெழுப்பித்தாரேன் பேர்குறித்துரைத்திடாயே

வசனம்.

அகோவாருந் தர்மராஜனே நீர்சொன்ன நீதிமார்க்கமெல்லாங்கேட்கமெத்த சந்தோஷமாச்சுது ஆனுலிதோமடிந்திருக்கிறநாலுபேரிலே உன்மனதுக்கேற்றவன் ஒருவனைச்சொல்லும் எழுப்பித்தருகிறேன் பின்னாய் தருமராசனே.

தருமர்சொல்-விருத்தம்

திருக்கனோராறுமெந்தன் தம்பிமார்க்கொருமைசெய்வேன்
உருக்கமாம்தம்பிமாரி லுயர்ந்தவன்சகாதேவனதான்

மருக்கியேஎழுப்பித்தந்தால் மத்தினாக்கொருமைசெய்வேன்
பருக்கராசக்தி பழமுறைப்படியினதையா

பொது-சபையார்சொல்-வசனம்

அதேதெப்படியென்றால் எமதர்மராசாவசனத்துக்குபதில்வசனம் தர்மராசாசொல்ல எமதர்மர் அதிகசந்தோஷத்துடனே தன் சுயரூபமாய் வருகிறவிதங்காண்க

இயமன்-வருகிற-தரு-இ-ம் மத்தியமாவதி

காலன்வந்தானே-கிடாவேறி - காலன்வந்தானே

சூலபாசக்கையிற்கொண்டு துடித்தமீசையை முறுக்கிக்கொண்டு
ஞாலந்தன்னில்தாமருக்கு நல்லவசனஞ்சொல்லவே (காலன்)
சென்னிமணிமகுடந்துலங்க சிறந்தமார்பில்கவசமிலங்க
மன்னுலகுக்குந்தூதர்நடுங்கமானிலந்தனில்மனிதர்தயங்க(கால
பருத்தவிழிகள்பொறிபறந்திட பார்த்தபேர்கள்மிகநடுங்கிட
கறுத்தமேனிபடைத்தமறலிகடுகிடந்துபரிவுடனிதோ(காலன்)
வையகம்புகழ்தர்மராவனை வருத்தமில்லாமல்வருந்திகார்க்க
கையிலிலங்கும்பாசசூலங்கண்டுதூதர்தெண்டன்செய்யவே(கா

தர்மர்சொல்-விருத்தம்

எந்தையேபோற்றிபோற்றி எமபுரத்தரசேபோற்றி
தந்தையேகலைமானுலே நடமில்லாக்காட்டில்நாங்கள்
வெந்துதான்கங்கையாலே மெலிந்துயிரிறந்தோமிந்த
நிந்தையையெந்தனுக்கு நிலைபெறஅருள்செய்வீரோ

வசனம்.

கேளுஞ்சுவாமி எமபுரத்தரசே நாங்களிந்தக்காட்டிலேஇப்படி அவ இப்படவேண்டிய விவரத்தைத் தெரியச்சொல்லுமையா சுவாமிதந்தையே

எமன்சொல்-விருத்தம்

கருத்தினில்களங்கமில்லா கனமவெறுதர்மதேனாய்
வருத்தமாய்துரியன்காள மாமுனிதனையழைத்துப்
பருத்ததோர்பூதமொன்று பண்புடனுண்டுபண்ணி
திருத்தமாய்க்கொல்லநினைந்தான் செய்வதுதெரிந்திடாயே

வசனம்

கேளுமப்பா தருமபுத்திரசிகாமணியே துரியோதனன் காளமாமுனியையேவி உங்களைவளையுக் கொல்லச்சொன்னான் காளமாமுனி யெகவியத்திலே பூதம் உண்டுபண்ணி உங்களைப்பட்சிக்க ஏவினனப்பா தருமராசனே,

எமதருமன்சொல்-விருத்தம்.

கலையெனவடிவுகொண்டு கானகமுழுதுமற்ற
மலைகளுக்குனறுந்தாண்டி மறையவர்பூணூலும்
நிலைபெறுகலைத்தோல்கொண்டு நிமிஷத்தில்மறைந்துவும்மை
அலையவேசெய்துஉகைளாருயிர்பிழைப்பித்தேனே

வசனம்

கேளும் தருமராசனே காளமாமுனி பூதத்தையேவி உங்களைக்கொல்ல நினைத்தபடியினாலே நான் மான்வேஷங்கொண்டு உங்களைத்துரத்தி வருத்தஞ்செய்து காத்துரட்சித்தேன் பூதமானது உங்களைப்பார்த்துஇறந்துவிட்டார்களென்று மறுபடியும் அந்தமுனியைப்பட்சித்து அக்கினியிலே விழுந்து மறைந்துவிட்டது தருமராசனே

தருமர்ச்சொல்-விருத்தம்

வஞ்சகதுரியன்காள மாமுனிதனையழைத்து
அஞ்சொலையுனைத்துக்கொள்ள யிசைந்தனனென்றுசொன்னீர்
சஞ்சலப்படாமலுந்தன் றுளிலைசிரமேற்கொண்டேன்
மிஞ்சியகாலில்வேறோர் வினைகள்வராமற்காப்பீர்

வசனம்.

கேளுமையா சுவாமி காளமாமுனியையழைத்து எங்களைக்கொல்லச்சொன்னானென்றுசொன்னீரே அப்படிவராமல் தற்காத்துசகாதேவனையெழுப்பி எப்போதும்போல ரட்சியுமையாசுவாமி எமபுரத்தரசே.

எமன்சொல்-வசனம்

கேளுமப்பா தருமபுத்திரசிகாமணியே இந்ததீர்த்தத்தைக் கொண்டு போய் சகாதேவன்பேரியேதெளித்து இந்தமந்திரத்தைச் சொல்லி எழுப்பும்பிள்ளாய் தருமராசனே

தருமர்சொல்-வசனம்

அப்படியே யெழுப்பினேனையா சுவாமி

எமன்சொல்-விருத்தம்

தென்றிசைக்கதிபனான சீறுருகடவுள்தானும்
கன்றெனநகைத்துதர்மா னனைமைசேர்வாய்வுமைந்தன்
வெற்றிகொளவீமன்பார்த்தன் வீரியநகுலன்மூவர்
அனறியேயிளையகோவை அழைத்ததேனருளசெய்வாயே

வசனம்

கேளும் தருமராசனே நச்சுத்தண்ணீர்குடித்து இறந்துபோன நால்வரிலே மூவரிருக்க இளையவனான சகாதேவனை எழுப்பச்சொன்ன விதத்தைதெரியச்சொல்லுமப்பா தருமராசனே

தருமர்சொல்-விருத்தம்

குந்திமுற்பயின்றெடுத்த கொற்றவனாவருக்கும்
முந்திவந்தவனானவேண்டி முறைப்படியொருமைசெய்தேன்
மந்திராதேவிபெற்ற மைந்தன்சகாதேவன்றன்னை
அந்தமாயெழுப்பச்சொன்னேன் ஐயனேசரணமையா

வசனம்.

கேளுமையா சுவாமி குந்திதேவிக்குசிரேஷ்டபுத்திரன்நானிருக்கிற படியினாலே மதத்திராதேவி குமாரனானசகாதேவனை எழுப்பச்சொன்னேனையா எமபுரத்தரசே

எமன்சொல்-விருத்தம்

சொல்லியமுறையால்தர்மா துயரதுதவிழ்த்தினேன்யான்
மல்லுதோள்சகாதேவனறன் வல்லுயிர்வரவழைத்தேன்
நல்லியல்தெளிந்தோர்நாமும் நற்பதம்பணிந்துநிற்கச்
செல்வரில்மூவர்மூர்ச்சைதெளிந்துயிர்தழைத்திடாரோ

27

வசனம்.

கேளும் தர்மராசனே ஒருவனேயெழுப்பித்தந்து மற்றமூவனா எழுப்பாமற்போவேனே அந்சமூவஙாயும்எழுபபித்தந்தேன் தருமராசனே.

இதுவும்-இயமன்-விருத்தம்.

நிதறுமைந்தாநீயும் தெய்வமாமுனிவரோடும்
போதவே வனங்கள்தோறும் புண்ணிய நதிகள்மூழ்கி
காதகரிவ்வூறுமல் கவலைதீர்ந்திருமென்றுநி
தூதரோடேமராசன தென்னகர்நடந்தானன்றே

வசனம்,

கேளுமப்பா தருமபுத்திரசிகாமணியே பன்னிராயிரம் முனிக்கூட்டத்துடனே கானகத்திலுண்டாகிய நதிகளிலேஸ்நானம்பண்ணி உங்கள் பகையாளிகளாகிய துரியோதனாதிகள் இன்னதென்று அறியாமல் செயம் பெற்று அரசாளப்பொகிறீகள் எனக்கு சிலவுதந்தனுப்பும் புத்திரசிகாமணியே.

தருமர்சொல்-வசனம்

அப்படியேபோய்வாருஞ் சுவாமி என்தந்தையாகியஎமபுரத்தரசே

தருமர்சொல்-தேவாரம்.

பூதலந்தன்னிற்பாண்டு புத்திரரொன்றைவரிந்நாள்
மாதவன்மகிமையாலே வந்தவூழனுபவித்தோம்
சோதனைக்காகவிட்ட சொர்னனமான்பின்வந்திப்போ
காதலாய்புனலருந்திக் கடுவிஷந்தனில்மாய்ந்தீரோ

இதுவும்-தருமர்சொல்-தரு-ஜம்பை.

ஆதிமூலப்பொருளேயாங்கள் பஞ்சபாண்டவர்கள்
நீதிவழுவாமல்தர்ம நிட்சயமென்றிருந்தேன்
சூதன்கபடன்சகுனி சொக்கட்டாடிநம்மை
மூதுலகெலாம்பழித்து முழுமோசஞ்செய்தான்
பாதகன்மூடன் துரியன் பாவியன்செயுங்கொடுமை
வாதனையாற்காடுறைந்து வந்தோம்தம்பிமாரே

சோதனையேயானறியேன் சோர்ந்துநால்வருமடிய
ஆதரவில்லாமல் பழிக்காளாகினேனே

மாதுதுரோபதைவனத்தில் மங்கையவளங்கிருக்க
நீதியோயிங்கெனைவிட்டு நிலத்தில்மடிந்தீரோ

கலையைநாம்துரத்திவந்து காடெல்லாம்திரிந்தலைந்து
நிலைகலங்கிநீருந்தி நீங்களிவிடராப்பட்டீர்

தலைக்கேறும்போதுவிஷந் தம்பிமாவுங்கள்
தாஷ்டீகமெபோனதெங்கே தானறியேனையோ

சிலைக்குகன்பார்த்தீபன் சிரசிற்கும்விஷமேறி
திகைத்துமண்மீதிலிற்கசிவனைசெபமோ அறியேன்

பலகலையெலாமுணர்ந்த நகுலர்சகாதேவர்
படுமவிஷத்தாலிறந்தகெதி பாவியறியேனே

பொதுகட்டளைக்கலிப்பா

சீர்பெறுமாயர்பாடியில் வெண்ணெய்நெய்திருடியுங் கடுகிஞ்சிதரமாதவன், கார்படைத்த திருமேனியுமாகியேகன்னிருக்மணிதன்னைவிடுத்துமே பேர்படைத்ததிருசங்கமும் ஆழியும்பெருவில்வாளுடன் தண்டமுமேந்தியே, பார்படைத்தகிருஷ்ணனுடைவாமுன் பட்சமாகவேபண்புடனே வந்தார்.

ஸ்ரீகிருஷ்ணதேவர்-வருகிற-தரு

வெற்றிகிருஷ்ணதேவரும்வந்தார்-உத்தமரான
வெற்றிகிருஷ்ணதேவரும்வந்தார்

வெற்றிகிருஷ்ணதேவரும்வந்தார் வீணைதம்புருநாரதர்பாட
வீரியமாடிடுமென்மையிலே வெகுசாரியமாகவேநாடகம்பாடவே

சங்குசக்கரந்தரித்துதார் துளபத்தையணிந்து
தத்தரிகிட தகதககிட தகதகதளாங்குதிமி தகததிங்கணத்தோமென

பாண்டவர்க்குத்துன்பஞ்செய்த பாவிதுரியோதரனே
கடையொடுமுடியதுகடலெனமடியவே
நெற்றியில்நாமந்தரித்து நிலவுமுக 'பூரித்து
கெட்டிடவோடவிரிட்டிடவாரிதத்தளங்குதிமிதகதிங்கணவென

கிருஷ்ணதேவனை-பாண்டவாள்போற்றும்-தரு

ஹரிஹரிகோவிந்தா ஆதியேசரணமையா
முராஹரிமுகுந்தாமூவுலகுக்காததசோதி
மச்சகூர்மவராகமான வாமனநரசிம்மா
பச்சைமுகில்மேனியனே பாரளந்தபத்மநாபா
செககருடன்மீதிலேறும் திருவுறைமணிமார்பா
எங்குள்குலத்தெய்வமேநின் னிணையடிசரணமையா
அரவக்கொடிதுரியாசன் அன்றுமுதலின்றளவும்
வருமம்வைத்துயெங்கள்மீதில் வஞ்சனைகள்செய்ததெல்லாம்
திருவுளமேதுணையென்றுந்தன் திருவடியில்மனதுவைத்தோம்
வரும்பிழைகளின்றளவும் மாதவனேகார்த்திடையா
வஞ்சனையால்கங்கைதன்னில் மாபாவிசுயோதனனும்
நஞ்சதுகலந்துவைத்தான் நாங்களுமிறப்பதற்கு
உந்தனிடகிருபையாலே உயிர்கொடுத்துகாத்தினாயா
தந்தைதாய்குருதெய்வமநீ தற்காத்தருள்புரியும்
சிந்தைகுடிகொண்டமூர்த்தி தெசரதராமாபோற்றி
பைந்துளபமாலைமார்பா பரந்தாமாபோற்றிபோற்றி

போற்றி-விருத்தம்.

கெருடவாகனேபோற்றி கேசவாபோற்றிபோற்றி
நரஹரிராமஜனா நரசிங்கரூபாபோற்றி
குருகுலம்விளங்கவைத்த குரிசிலேபோற்றிபோற்றி
திருவடிமறவேன்யானுன் சீர்பாதம்போற்றிபோற்றி

நச்சுப்பொய்கை

கிருஷ்ணசுவாமிசொல்-விருத்தம்

தருமரேசொல்லக்கேளீர்தரணியிலும்மைப்போலும்
பொறுமையார்க்குண்டுயிந்தப் பிழைதனை துரியன்செய்தான்
மறுமையாய்ஜெயமாகி மனனவனனைநீரும்
உறுதியாயிருந்திரல்லோ உமக்கவர்சரியொவ்வாரே

வசனம்

ஆ-ஆ-ஆ-கேளும் பூர்வ பூஜாபலம்பெற்றதர்மநந்தன இந்தவுலகத்தி லும்மைபபோலபெருமை எந்தராசாக்களுமில்லை அதெப்படியென்றால் அத்துரியோதனன் செயத பிழைகளெல்லாம பொறுத்துக்கொண்டுஜெயான உறுதியாயிருந்த உமக்கு அவர்களொருபொருட்டல்ல தர்மராசனே

மங்களம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்

மங்களம்-செய-மங்களம்-சுபமங்களம்-மங்களம்
மங்களமாந்திகழ்ச்சந்திரகுலந்தன்னில்
வரம்பெற்றமிகுசற்குணவளம்பெற்றுயர்
செகம்பற்பலதிசையில்வெகுசெயங்கொள்புகழரியகுருகுலம்

நச்சுப்பொய்கை

முற்றிற்று.